# பதில் தருவோம்! பயங்கரம் சாய்ப்போம்!




# அறப்போர்

ஆசிரியர்: அரங்கண்ணல்

தி.மு.க. வார வெளியீடு.

30-6-61 ] :-: ] விலை 16 காசு


## மதுரை மாநாடு! பொருளாளர் பூரிப்பு!

பூரிப்போடு அறிவிக்கிறார் பொருளாளர் மு. க. அவர்கள்! அன்பிலும், மன்னையும், அழகரடியும் துணை நிற்க மதுரைமாநாட்டில் கடைவைக்க ஏலம் போட்டாராம்,ஏலம்!! கடைகள் வைப்போருக்கும், ஓட்டல் சிற்றுண்டியளிப்போருக்கும், சோடா பெட்டிக் கடைகளுக்குமாக,ஏலத்தின்மூலம் மட்டும் இருபதினாயிரம் ரூபாய் கிடைக்குமாம், மாநாட்டுக்கு! எத்துணைமகிழ்ச்சியான செய்தி? முறுக்குக்கடைகாரர் ஒருவர் ஆயிரம் ரூபாய் ஏலம் எடுத்தாராம், தன் கடைவைக்க! ஆச்சரியமாயுள்ளதன்றோ? ஆமாம். உண்மையில், மதுரையடைந்திருக்கும் பரபரப்பின் அளவினை எப்படிச் சொல்ல இயலும்? போய்வந்திடின் புரியும் என்கிறார் தலைமைநிலையச் செயலாளர்

**முறுக்குக் கடை மட்டும் ரூ 1000!**

மதியழகன்! புதியதோர் நகரமே உருவாகிறதாம், திருப்பரங்குன்றத்தில்!!

மாற்றார் ஏசுகின்றனர்—இதுகளுக்குள் செருப்படி நடக்கிறதாமய்யா தெரியுமா என்கிறாராம் காமராசர்—முன்னொரு நாள், அவருக்குப்பபுத்துணர்ச்சி அளித்ததும் இதே திருப்பரங்குன்றதான்நமக்குபுத்துணர்ச்சிவேண்டியதில்லை, உணர்ச்சி இலாவிடினன்றோ புதிய உணர்ச்சி வேண்டும்!!—போனவர்களை வைத்து, நமது முகத்தில்கரிபூச எண்ணும், காங்கிரசுக்கு......கற்பனைகளால் ஏதேதோ கோட்டைகட்டி வாழ நினைக்கும் ஈரோட்டாருக்கு...... அவர்போன்றோரை நம்பி உழைத்து ஏமாத்த நாம்தரவேண்டிய பதில், பேச்சல்ல! செயல்¡!

**கடைகள் ஏலம் ரூ 20,000-க்கு!**

நெருங்கிக் கொண்டிருக்கும் தேர்தலுக்கு நிதி வேண்டும்—காணிக்கை செலுத்த தக்கதோர் இடம் நமது மாநாடு—திட்டங்கள் தீட்டவும் அதேசமயம் அதன் மூலம் கழகத்துக்கு நிதி ஈட்டவும் முயலும்' கழகத்தின் முயற்சி, இம்மாநாடு!! அதற்கு, கடைவைப்போர் ஏலத்தின் மூலம் இருபதினாயிரம் அளித்தனர் என்பது இனியசெய்தியன்றோ? பூரிக்கிறார் நம் சகோதரர்— பொருளாளர்! அதிகப்பூரிப்பை, மாநாட்டிற்குப் போவதன் மூலம் நாமும், அதிக நிதியைச் சேர்த்துக்காட்டுவதன் மூலம் நமக்கு அவரும் பரிமாறி கொள்வோம். அனைவரும் கூடி மகிழ்ந்து. கொள்கைவளர்ப்போம்!!

கோர உருதான்! கொடுமைச் சின்னம்தான்!
கழகத்தை அழிக்க' தென்னக விடுதலையைச்சிதைக்க
இந்திய முதலாளித்துவம 'காங்கிரசு'த்தோற்றத்துடன்,
இன்று எடுத்திருக்கும் உருவம் பயங்கரமானதுதான்!!
பணபலம்! பத்திரிகைபலம்! அதிகாரபலம்! போதாக்குறைக்கு
"துரோகிகள்' என்கிற குண்டாந்தடியும், இப்போது,
கிடைத்திருக்கிறது. எனவே, வேகமாக, விறுவிறுப்போடு,
நமமைநசுக்கக் கிளம்புகிறார்கள்! பயணம் வருகிறார்கள்!
அமைச்சர்கள் ஊர்ஊராகப் போகிறாகள்! ஆள்பிடிக்கிறார்கள்!
அடுத்துவரும் தேர்தலில், நம்மைஅழிக்க, என்னென்ன
செய்யலாம் எனயோசிக்கிறார்கள்!!

இந்தச்சமயம், வாளாயிருத்தலாமோ தோழர்காள்?
வசதயுடையோருக்காக வளைந்துவிடமுடியுமோ நீதி?
உருவம்கண்டு, மலைத்துவிடலாமோ, மனிதநெறி?
கொடுமை, இவ்வளவு பெரிதாயுள்ளதே! என்று, சளைத்து
—விட்டால்
பிறகுஎப்படி அன்புநெறியும் அறவழியும் அமையும்?
ஜார், மன்னன்! சாய்ந்ததில்லையோ ருஷியாவில்? வெள்ளை
ஏகாதிபத்தியம் வீழவில்லையோ இம்மண்ணில்!
உருவமல்ல பெரிது! கொடுமை ஒருபொருட்டுமல்ல!!
கூடியிருக்கும் நாமெல்லாம் உணர்ந்தெழுந்தால்—
மாமலையும் ஓர்கடுகாம்! மாஉருவும், சிறுபுல்லாம்!!
"முப்பதுகோடி மக்கள்நாம், துப்பிடும் எச்சிலில்
கரையும் பிரிட்டிஷாதிக்கம்'', என்பார், அந்நாள்
காங்கிரசார்! அதையே, திருப்பிச்சொல்வோம்!
தினம், மக்களை, நாம்சந்திப்போம்! உழைப்போம்!!

பொதுத்தேர்தல்---சரியான நிலைக்கண்ணாடி.
அதன்மூலம், அடிப்போம், சாவுமணி!
கொடுப்போம் நல்லபதில்!!---கொள்கைவீரரே!
திட்டம்போட்டு, ஒவ்வொருவட்டமும்,
செயல்புரிவீர்! நாள் தூரத்தில் இல்லை---நமது
கடன் பணிசெய்வதே! பலன், கிட்டும்!!

ஓய்வுறுதீர்—வேளையில்லை, அதற்கு---
நாட்டின் விழிகளே! நல்லருந் தோழர்காள்!!
நமக்கென்ன கவலை? கையில் குறள் ஏந்தி
கருத்தில் அன்பேந்தி, வாலிபர் தம்பலத்துடன்
அநீதியைச் சாய்க்கும் அறிஞர் அண்ணா இருக்கையில்?

—*— —0— —*—

# நீங்களும்

அன்புள்ள அண்ணலே!

திராவிடநாடு பகற்கனவு என்று நிலைநாட்ட மாற்றார் பழைய ஏட்டைப் பிரித்துக் காட்டுகின்றனர் சேலம் திராவிட கழகம் முன்பு அச்சிட்டு வழங்கிய துண்டு அறிக்கை ஒன்று மூன்றுண்டுக்கு முன் கிடைத்தது. தமிழ் தென்றல் திரு. வி. க, அவர்கள் சென்னை மாநாட்டில் நிகழ்த்திய இன்றியமையா பேச்சின்சுருக்கமாகும்அது. அவ்வறிக்கையிலிருந்து சில கீழே கொடுத்துள்ளேன்.

தங்கள்,
து. ஆ. சதாசிவம்,
சேலம்.

"9-11-47ஞாயிறன்றுசென்னை செயின்ட்மேரி மண்டபத்தில் தோழர் மா. பொ. சிவஞானம் தலைமையில் நடைபெற்ற தமிழரசுக் கழக மாநாட்டில் தோழர் வ. உ. சிதம்பரம் அவர்களின் படத்தைத் திறந்துவைத்து தமிழ்ப் பெரியார். திரு. வி. க. அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.

வடநாட்டாரால் திணிக்கப்பட்டபோலி தியாகம் தமிழர்களின் நாகரீகத்தையும், கலைப்பண்பையும், பாழ் படுத்திவிட்டது ஒன்றின் மீது அளவற்ற பைத்தியம் பிடித்து அலைவதும் சகஜமாய் விட்டது. உதாரணமாக நமது மாகாணத்தின் மந்திரிகளில் ஒருவர் தமிழர்களின் கலை பொக்கிஷமான குறளிலிருந்து காதல், மணவாழ்க்கை ஆகிய பகுதிகளை எடுத்துவிட வேண்டுமென்றுகூட சொல்லும் அளவு பைத்தியம் பிடித்திருக்கிறது. தமிழர்களின் பண்பு, நமது மந்திரியாருக்குத் தெரியாது என்றுதான் நினைக்கிறேன், வ. உ. சியின் தொண்டினைப் பற்றிப் பேசப்பேச நம் நாட்டின்மேல் தன்நம்பிக்கை உண்டாகும். அப்பொழுது நேருவின் கண்காணிப்பு தேவையில்லை. படேலின் உதவி வேண்டியதில்லை. என்ன ஏற்படும்? தமிழ் நாடு தமிழர்க்கு ஆனால் ஆந்திர நாடு பிரியும், மலையாள நாடு பிரியும், கன்னடநாடுபிரியும். எல்லாம் தனித்தனியாகப்பிரியும். பிரிந்த சிலகாலத்திற்குள் என்ன ஏற்படும்? ஆந்திரர்கள் அச்சத் தெலுங்கு (சுத்ததெலுங்கு) வேண்டுமென்பார்கள். மலையாளிகளுக்கும் அச்ச மலையாளம் வேண்டுமென்பார்கள். கன்னடியர்களும் அப்படியே! அப்பொழுது சுத்ததெலுங்கில் 100க்கு 90 தமிழ் சொற்களாக இருக்கும் சுத்த மலையாளத்தில் 100க்கு 95 தமிழும். அப்படியே கன்னடத்திலும் அமையும். அப்போது மொழியால் எல்லோரும் ஓர் இனம் என்பதை உணர்வார்கள் இன்பத்தால் ஒன்றென்று அணைவார்கள். எனவே இப்பொழுது தமிழ் நாடு, ஆந்திர நாடு, மலையாள நாடு, கன்னட நாடு அதற்குப்பிறகு என்ன? நீங்களேசொல்லுங்கள் (என்று மக்களைப்பார்த்துக்கேட்டார் கூடியிருந்தோரில் பெரும்பகுதியினர் திராவிட நாடு திராவிடருக்கே! என்று பெரும் ஆரவாரம் செய்தனர்)

ஆம் அடுத்து திராவிட நாடு திராவிடருக்கேயாகும். இதை அடைவதுதான் தமிழனுக்குப் பெருமை! வடநாட்டுப் பாசிசத்தைத் தமிழன் இன்று தாங்கி திணறவேண்டியிருக்கிறது! சிறப்பாக ஒரு இனத்தாரின் ஆதிக்கத்தை நாம் ஒழிக்க வேண்டியிருக்கிறது! இதையே நான் கடலூர் மாநாட்டில் கூறினேன்!

சாதி, மத உயர்வு, தாழ்வுகளை யொழித்த சமதர்மமே எனது கொள்கை! வெள்ளையர்க்குத் துணையாக இருந்துகொண்டுவட நாட்டுப் பாசிசம் நம்மை ஆட்டிப் படைக்கிறது. அதற்கு இடம் தராதே. தராதே, தராதே இந்த வட நாட்டுப் பாசிசத்தை யொழிப்பதுதான் எந்தக் கழகமாயிருந்தாலும் அக்கழகத்தின் முதல்வேலையாகஇருக்கவேண்டும்

* * *

(திரு, அண்ணன் அண்ணல்)

அவர்கட்கு வணக்கம், தங்கள் காஞ்சி மலர், பார்த்து, நுகர்ந்தேன் மனோரஞ்சிதமாக வீசியது அறிஞர் அண்ணா, மீது பற்று கொண்டு 15 வருடமாகிறது அவர் கொள்கை என்வாழ்க்கை என்று கருதிவந்துகொண்டிருக்கிறேன் கழகத்துக்கு நடிகனாக இருந்து, ஒன்றும் செய்ய வில்லையே என்று இருந்தேன். சென்றமாதம் அண்ணா, மயிலை வந்தசமயம் என், பணமாக தேர்தல் நிதி ரூ 50-50 புதுக்காசு என் நிதியாக அளித்துள்ளேன் என் வாழ்நாளில் மறக்க முடியாததாகும் இது.

எம். கே. கோவிந்தராசன்,
(நடிகர்.)

* * *

அன்புள்ள அறப்போர் ஆசிரியருக்கு,

சிலநாட்களுக்கு முன்பு தென்றலில் "செருப்பு என்றுதொடங்கி விளக்குமாறு" என்று முடிக்க வேண்டுமாய் வெண்பாப் போட்டியின் அடிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேற்கூறிய அடி கவிஞர் கண்ணதாசனால் கொடுக்கப்பட்டது. அவ்வரி இலக்கியத்தில் இருக்கிறது. அதை சிதைத்து குறைத்து நசித்துவிட்டார். இலக்கியத்திலிருந்து எடுத்து அரசியலுக்கு பயன் படுத்துவது அவருக்கு கிள்ளுகீரையாகி' விட்டது. அப்பாடல் பின்வருமாறு.

"செருப்புக்கு வீரரை சென்று
ழக்கும் வேலன்
பொருப்புக்கு நாயகனைப் புல்ல-
மருப்புக்குத்
தண்டேன் பொழிந்த திருத்
தாமரைமேல் வீற்றிருக்கும்
வண்டே! விளக்குமாறே"

அப்பாடலின் பொருள் பின்வருமாறு.

"போர்க்களத்தில் புகுந்துபோர் வீரர்களைத் துன்புறுத்தும் வேல் படையைஉடையவனுகிய மலைக் குத்தலைவனுக விளங்கு முருகப் பெருமானைத் தழுவுவதற்கு உரிய வழியை, மணம் பொருந்திய குளிர்ந்த தேனினை மிகுதியாக சிந்திய அழகிய தாமரைப் பூவின் மேல் தங்கியிருக்கும் வண்டு தானே காட்டும்!"

இவ்வளவு அழகான பாட்டை தறகால அரசியலுக்கு பயன் படுத்தியிருக்கிறார். கவி காளமேகத்தின் வரியை அரசியலுக்கு பயன் படுத்தியது வருந்தத் தக்கதே. மேலும்செருப்புக்கு காளமேகம் கொண்ட பொருள் "போர்!" "விளக்குமாறு" என்பதற்கு விரிவாக சொல்லுவாயாக என்று பொருள்.

மேற்கூறிய செய்யுள் கலைச்செல்வி தொகுத்துள்ள தனிப் பாடல் திரட்டில் 94-ம் பக்கத்தில் உள்ளது.

இப்படிக்கு,
பொள்ளாச்சி, ஜெயசேகரன்.

## கோவைமாவட்ட, திராவிட மாணவர் முன்னேற்றக் கழக முதல் மாநாடு

9--7--61 ஞாயிறு காலை கோவை ஸ்டேன்ஸ் மில் மண்டபத்தில்
தலைவர்: எஸ். அப்பர்சுந்தரம் எம். ஏ. பி. டி (பி. எல்

திறப்பாளர்: இளங்கோவன் பி. ஏ.

கலந்துகொள்வோர்:

| | |
|---|---|
| உ. பில்லப்பன் | சில்வர்ஸ்டர் (கேரளம்) |
| எம். எஸ். வெங்கடாசலம் | எம். ஏ. மசூத் ” |
| டி. கே. பொன்னுவேலு | ஏ. திரவியம் |
| வெ. கிருட்டிணமூர்த்தி | அன்பாளன் |
| க. இராசாராம் | உதகை ஜெயராமன் |
| என். வி- என். சோமு | ஆலம்பாளையம்— கண்ணப்பன் |
| ஆலடி அருணு | தாது (கன்னடம்) |
| எம். சி. பாலன் | ந. குள்ளன் |
| உ. கணபதி | தோழியர் ஏழிசைவில்லி |
| புதுவை ஆறுமுகம் | ” எஸ். பி. சற் நணம் |
| கு இளஞ்சேரன் | கோ. சோமசுந்தரம் |
| நீ. அன்புச்செழியன் | பி. தியாகராசன் |
| இரா. சேது | நவநீதகிருட்டிணன் |
| ச. அமுகன் | ஜே. எஸ். ராஜு |
| எஸ். பி. மலேச்சாமி | மணிவேந்தன் |
| மதுரை மாறவேள் | அய்யாசாமி |
| கா. சுப்பிரமணியம் | பருவதக்கண்ணன் |
| ஆர். பி. மாசிலாமணி | தங்கசாமி |
| ஏ. பி. சீனிவாசன் | புலமைப்பித்தன் |
| தோப்பூர் திருவேங்கடம் | அ. சபியுல்லா |
| கே. இ. சம்பத் | ஏ. பாலசுப்பிரமணியம் |
| சிவகும்ாரன் | இனியன் |
| இலக்குமணப்பெருமாள் | அ. தேவராசன் |
| ஏ. எல். சுப்பிரமணியம் | இளசை பருதிமால் |
| இளந்திரையன் | |
| எஸ். டி. சி. இராமன் | |
| இரா. மதனகோபால் | |

கே. ஏ. கிருட்டிணசாமி எம், ஏ.
(வ. கு. தலைவர்)

இரா, அரங்க அரசு
(பொருளாளர்)

ஆ. திரு. மாறன் பி. இ.
கு. மருதாசலம் (பி. ஏ.)
வீ. இராமசாமி
மு. வேணுகோபால்
செயலாளர்கள்

வாரீர் மதுரை!

வாரீர் மதுரை!

வாரீர் மதுரை!

# நானும்



# நமது பாசறை

## மதியழகன் பி.ஏ.

வெடித்ததுவா பீரங்கி? விண்வெளிதான் மின்னிமின்னி
இடித்ததுவா? இளஞ்சிங்கம் எழுந்திருந்து தன்முழக்கம்
கொடுத்ததுவா? எனநினைக்கக் குரல்முழக்கம் தரும்மனிதர்

தடித்தனத்தை—மடத்தனத்தைத்—தமிழினத்தைக்—
—கெடுப்போரின்
குடித்தனத்தை வளர்த்து வரும் கொடுங்கோலர் ஆட்சிக்கு
அடித்திடடா சாவுமணி! அடித்திடு! வா! எனக்கூறித்
துடித்தெழுந்து திராவிடரின் துயர்துடைக்கும் திருஉருவம்!

முத்தே! மரகதமே! முழுமதியே! பழக்குலையே!
சொத்தே! சுடரொளியே! சுகப்பொருளே! அகப்பொருளே!
சித்திரமே! ரத்தினமே! சிரிக்கின்ற புதுமலரே!

எனக்கொஞ்சிப் பலர்கிடக்கும் இளம்பருவ நாளில்தன்
மனக்காதல் அத்தனையும் மாண்புள்ள கழகத்தில்
கொண்டிருந்த தனிமனிதர்! கொள்கைக்குத் துணைமனிதர்!

ஆணவ ஆட்சியை அலற வைத்த
மாணவர் படையின் மாணவத் தலைவர்!

தழும்புகள் நிறைந்த தேகம்!
தளர்ந்திடா உணர்ச்சி வேகம்!
"களம்புக வேண்டும்! தியாகம்
காட்டுவோம்! ஒழிப்போம் துரோகம்!
நலமில்லை பலர்க்கும் சோகம்
நரிகளுக் கிங்கே யோகம்!

இந்நிலை—நாட்டின் இழிநிலை மாற்று!
நன்னிலை ஏற்று நாட்டினை மீட்டு!
எனக்கூறு கின்ற இலட்சியத் தொண்டர்!
இனிக்கும் கதைகள் எழில்மிகு கட்டுரை
தீட்டிக் கொடுக்கும் தென்னக எழுத்தினர்!
காட்டிக் கொடுக்கும் கழிசிறை மனிதரை
வாட்டி எடுத்திடும் அண்ணன்

யார் இவர்?
மக்களின் தொண்டர் மதியழகன்!

—o—o—o—

கவிஞர் 'பொன்னிவளவன்

# 60,00,000 பேர்களைக் கொன்ற காதகன்!

அத்துண்டுச் சீட்டில் அவனுக்குக் கொஞ்சம் பணம் கொடுக்கும்படி எழுதியிருந்தது. என்' படைப்பிரிவின் 'சம்பள அதிகாரி யிடம், அதன்படிக் கொடுக்கச் சொன்னேன். மறுநாள் காலை, அந்த இடத்தைவிட்டு, இன்னும் உச்சியிலிருந்த ரெட்டன் பாசலம் எனுமிடம் நோக்கிக் கிளம்பினோம்! தோல்வியின்விளைவு எல்லோருக்கும் தெரிந்துவிட்டதால், இராணுவ வீரர்களுக்கு என்னிடம் பழைய மரியாதை இல்லை. பலரையும் போட்டு வாட்டுவானேன் என்றெண்ணினேன். இருந்த பணத்தில் எல்லோருக்கும் கொஞ்சம் கொடுக்கச்சொன்னேன்! ஒவ்வொருவரும் உற்சாகமாக வாங்கிக் கொண்டு, நழுவினர். என் பணியாளாக இருந்த ஒரு பெண் மட்டும், "உங்களோடு வருகிறேன்!" என்றாள். மறுத்தேன்......இது முடிந்து, சிலருடன், மேலே நகரும்போது கால்டன்பிரன்னரிடமிருந்து ஒருவன் வந்தான். உத்திரவைத் தந்தான். "அமெரிக்கரையோ, பிரிட்டிஷாரையோச் சுடாதே-ஹிம்ளர்," என்று, அதில், கண்டிருந்தது. கையெழுத்திட்டு விட்டுச் சோர்ந்துபோய் உட்கார்ந்தேன். அவன் இறங்கி ஓடினான். இந்த உத்தரவை, என் ஆட்களிடம் சொன்னேன். இவ்வளவு சீக்கிரம், எங்கள் கதையின் முடிவு கட்டம் வரும் என்று எண்ணவில்லை. எங்களுக்குச் சமீபத்தில்தான் அமெரிக்கத் துருப்புகள், தங்கியிருந்தன. எந்த ஹிம்லரை வாழ்த்தினார்களோ அதே பெண்கள் இப்போது அமெரிக்கருடன் கூடிக் குலவிக் குதூகலிப்பதாகக் கேள்விப்பட்டேன்! பலர் துரோகியாக மாறி எங்களைப் பிடித்துக்கொடுப்பதாகவும் சொன்னார்கள்!!

சாதாரணமானவர்கள் கூட எங்களை வெறுப்பதாகச் சொன்னார்கள். நாங்கள் அகப்பட்டால் அமெரிக்கரிடம் கொண்டுபோய்ப் பிடித்துக் கொடுப்பதாவும். ஆங்காங்கிருந்து செய்திகள் எனக்கு எட்டின. எந்த ஹிட்லருடைய பெயரைக்கேட்டால் "வாழ்க!" போட்டார்களோ, அதேமக்கள் "ஒழிக" போட்டார்களென்றால், என்னசொல்வது!! அதோடு கூட அல்ல, நாஜிப்படைகளைக் கண்டால், மலையில் வாழ்ந்தமக்கள், சுடுவதாகவும் கேள்விப்பட்டேன். உயிர்தப்புவதற்காக என்னிடமிருந்த ஆட்களும் சுட்டார்கள், ஆங்காங்கே. இந்தச்சூழ்நிலையில் என்னிடம் நீண்டநாட்களாகக் காரோட்டியாகயிருந்த போலான்ஸ்கி என்னிடம் வந்து, "சார்! எனக்கு ஒரு காரோ, அல்லது டிரக்கோ கொடுக்கும்படி உத்திரவுபோடுங்கள். அதை வைத்துக் கொண்டு நான் பிழைத்துப்போகிறேன்." என்றான். டிரக்கு ஏன்? கார் ஏன்? இருப்பதோ. மலையில்! அதனால், எது உனக்குத்தேவையோ அதை எடுத்துக் கொண்டுபோ, என்று அனுமதித்தேன்! எத்தனையோ ஆண்டுகளாகத் தன்னுயிரைவிட என்னுயிரைப்பெரிதாக மதித்த அவனுக்கு இச்சமயத்தில் எதைச் செய்தாலென்ன!!

என்னுடைய 'பியட்' காரை, ஒரு ஓரம் விட்டுவிட்டு, ஒரு டிரக்குடன் அவன் போய்விட்டதாகச் சொன்னார்கள்.

என்னிடம் இத்தனை நாளும் நம்பிக்கையுடன் ஊழியம் செய்து வந்த பர்ஜர் என்பான், என்னைத் தனியே அழைத்துச்சொன்னான், "சார்! போர்க்குற்றவாளியென்று தங்களை எதிரிகள் வலை போட்டு வருகிறார்கள், கைது செய்ய. எங்கள் மீதெல்லாம், அப்படியொருபழியும் இல்லை. நாங்கள் உங்களோடு இப்படியே இருந்தால். உங்களுக்கு வரும் பழியும் பகையும் எங்களையும் சேரும். அதனால் சொல்கிறேன் யாராவது ஒரு ஆளை எங்கள் தளபதியென்று சொல்லி வைத்துவிட்டு, எங்களை விட்டு எங்காவது நீங்கள் போய்விட்டால், ரொம்ப நல்லது. எங்களுக்குச் செய்த பெரிய உதவியாயிருக்கும்."

"வீரனே! உங்களை விட்டுவிட்டு ரெட்டன் பாசலத்தை விட்டு கிளம்புவதென்று நானே முடிவு செய்துவிட்டேன். போர், முடிந்துவிட்டது. யாரையும் நீங்கள் இனிமேல் சுடவேண்டாம். உங்களை நீங்கள் காப்பாற்றிக்கொள்ளலாம்."


நான் எதற்காகவும் வருந்தவில்லை. என் மனைவிமக்களுக்கு, இப்படிப்பட்ட அதிர்ச்சிகள் அடுக்கடுக்காய் வராமலிருந்தால் எதாவது செய்திருக்கமுடியும். பலரைப்போல, வெளி நாட்டுக்குப் பணம் அனுப்பி, என் குடும்பத்தைப் பாதுகாப்பாக நான் அனுப்பியிருக்கமுடியும். யாராவது ஒரு யூதனிடம் அவனுக்குச் சலுகை செய்வதாகச் சொல்லியிருந்தால்

கூட, அவன், எனக்கு வேண்டியதைச் செய்திருப்பான்!! என் மனைவிக்கு, திராட்சைக்கொத்துக்களைப் பரிசாகஅளித்துவிட்டு, அல்டாசீ மலையின் உச்சி நோக்கி நடந்தேன். அதோடு, எதிரிகளான ரஷியர்கள் பிடித்துவிட்டால், இதை விழுங்கிவிடுங்கள் என்று என் குழந்தைகளுக்கும் மனைவிக்கும் ஆளுக்கொரு நச்சு மாத்திரையும்' கொடுத்தேன்!!

பிறகு, வேருெரு பெயருடன் அமெரிக்கரிடம் சிக்கினேன்...... ஈச்மெனை அவர்கள் தேடிக் கொண்டிருக்கிருர்கள் என்று எனக்குத்தெரியும்... இருந்தாலும் அதிகாரிகள் கேள்வி கேட்கும் போது நான் ஏதாவது சொல்லித் தப்பிேனன்........... (அவன் எப்படித்தப்பினுன் என்கிற விளக்கம்தான் முன்பே தரப்பட்டிருக்கிறது! ஆ—ர்)... கடைசியாக, நான் சொல்லிக் கொள்வதெல்லாம், நான் எதற்காகவும் வருந்தவில்லை. அடால்ப் ஹிட்லர், தவறு செய்திருக்கலாம் ஆனுல் ஒன்று மட்டும் உண்மை. அவர் ஒரு சாதாரண வீரனுகயிருந்து உழைத்து எட்டு கோடி ஜெர்மானிய மக்களின் சர்வாதிகாரியாக வந்தார்! நான் ஒரு தடவை கூட அவரைச் சந்தித்துப் பேசியது இல்லை. ஆனுல் அவருடைய பெயரே எனக்கு உற்சாகமளித்தது. அவர் பெற்ற வெற்றிகளைக் கேட்டபோது, "நாம் அடிபணிய வேண்டிய ஒரு தலைவன்" என்று நானுகவே அவருக்கு அடிமையாகிவிட்டேன். உண்மையில் அவர் ஒரு உயர்ந்த தலைவர்தான்! இப்போதும், நான் அதையே சொல்வேன் என்னை அடித்தாலும், சுட்டாலும், 'என் தலைவர் அவர் தான்' என்றேசொல்வேன்!!

செய்ததெல்லாம் தவறு— முட்டாள்தனம்— என்று வேடம் போட நான் விரும்பவில்லை, செய்ததையெல்லாம் தவறு என்று சொல்லி நான் புனிதனுகி விட்டதாக என்னை நானே ஏமாற்றிக் கொள்ளவும் மாட்டேன். 1933ல் ஹீம்ளருடைய அதிகாரிகள் போட்ட கணக்குப்படி ஒருகோடி யூதர்களையும் நாங்கள் கொன்றிருந்தால், "ஆகா! அழித்து விட்டோம், நமது எதிரிகளை!" என்று சொல்வேன். போட்ட திட்டப்படி அவ்வளவுபேரை நாங்கள் கொல்லவில்லை என்றுமட்டுமே நான் சொல்ல முடியும்.

ஒழிக்கவேண்டும் என்று கங்கணம் கட்டி வேலைசெய்தும். இன்றைய தினம் ஏராளமானயூதர்கள் உயிரோடிருக்கிருர்கள் என்ருல், இயற்கை நியதி அவர்களை வாழவிட்டிருக்கிறது, ஆண்டவன் சித்தம் அதுபோலும் என்றே நான் கருதுகிறேன். எங்களை ஆட்டிப்படைத்து ஆயிரமாயிரம் ஆண்டுகளாக உயர்ந்தோர்களாக விளங்கிய ஒரு எதிரியை ஒழிக்கப்போராடினேன் என்பதை நான் ஒளிவு மறைவில்லாமல் சொல்லுவேன். ரோமாபுரி உண்டாவதற்கு முன்னரே, எழுதப் படிக்கத்தெரிந்தவர்கள் யூதர்கள்! ஆருயிரம் ஆண்டுகளுக்குமுன்பே இந்தக் கூட்டம், தங்களுக்கென



என்னமோ படம்போலிருக்கிறதே என்று எண்ணுதீர்கள்! கொலை செய்யப்பட்ட யூதர் ஒருவரின் நெஞ்சுப் பகுதியை வெட்டியெடுத்துப் பதப்படுத்தி விளக்கு "ஷேடாக" உபயோகப்படுத்தினுராம், ஜெர் மானியத் தளபதி ஒருவனின் மனைவி!! மனிதக் கூட்டின்மேல், அம்மங்கை, அலங்காரமான இவ்வோவியத்தை ஊசியும் நூலையும் கொண்டு, வரைந்தாளாம். எவ்வளவு மனத்துணிவு இருக்கவேண்டும் அந்தோ!!

சட்டங்களை எழுதிவைத்துக் கொண்டு வாழ்ந்தது என்று எண்ணும்போது, என் மனம் எரிகிறது. அதேசமயம், அப்படிப் பட்ட நிலையில் வாழ்ந்த அவர்களது நாகரீகத்தை நான் வியந்தும் பாராட்டுகிறேன்.

* * *

கடித்த பாம்புகூட ஓடிவிடும்! கொத்தும் கழுகுகூடப் பறந்து விடும்!! தான் செய்த கொடுமைக்குத் 'தத்துவ' விளக்கம் தருகிருன், ஈச்மென்,

யூதர்கள் மீது அவனுக்கு ஏற்பட்ட வெறுப்பின் விளைவே, இத்தனையும்! கொலை—படுகொலை— உலகத்தைவிட்டே அறவே யூதர்களை ஒழிக்க வேண்டுமென்கிற அளவுக்கு ஆவேசம்— யூதர்கள் பால் அவனுக்கேற்படக் காரணம் என்ன?

வெறுப்பு ஏற்படின் வீணன் என்று பழிசுமத்தி மகிழ்வார்கள்; அவனுடைய வாழ்க்கை வசதிகளை முறித்து அவன் படும் திண்டாட்டத்தைக் கண்டு தேன்குடிப்பதுபோல எண்ணிமகிழ்வார்கள்; ஊர் உலகத்தில் இது சகஜம். உலகை விட்டே, ஒருவர் இருவரல்ல, ஒரு சமூகத்தையே ஒழித்துக்கட்டுமளவுக்கு வெறிகொண்டதாக மனித உள்ளத்தை மாற்றியது எதுவென்பதை எண்ணும் போதுதான், நாஜிசம் வளர்த்திட்ட வம்பின் அளவும் விளைவும் புரியும்.

நச்சுவாயு அறைகளும், ல்ாரிகளில் பிணங்கள் தள்ளுவதும் நடத்தி "ஒரேவழி"யினைக் காண்பதற்குமுன் இருபதாண்டுகள், யூதர்கள்மீது வெறுப்புப் பிரச்சாரத்தை இடைவிடாமல், நாஜிஸ்டுகள் செய்துவந்தார்கள். "எப்படிய்ய உன்னுடைய ஆட்கள் 90,000 பேரைக் கொன்ருர்கள்?" என்று போர்முடிந்த பிறகு நடந்த விசாரணையில்ஜெர்மானியத் தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் ரீச்வான் டெம்பாச்சி லெவ்ஸ்கி என்பானைக் கேட்டபோது, அவன் சொன்னுன், "எங்களது இனத்தைவிட யூத இனம் மட்டமானது என்கிற போதனையை நான் சிறு வயதுமுதல் கேட்டவன். யூதர்கள் என்போர் மனிதர்களே அல்ல, என்பதே என்மனதில் ஊறிய எண்ணம், எனக்கு அவர்களைப் பழிவாங்குவது பயங்கரமாகவோ, கூடாததாகவோப்படவில்லை"

போலந்தைக் கைப்பற்றிய போது அங்கு கவர்னர் ஜனரலாகயிருந்த அண்ட் ஹன்ஸ் பிராங்க் என்பான் என்ன சொன்னுனும் தெரியுமா? அவன் சொன்னது, இது; "யூதர்போக்கை ஆண்டாண்டுகாலமாக எதிர்த்துப்— போராடி வந்தோம். என்னுடைய டைரியே, இப்போது எனக்கு 'அப்ரூவர்' ஆகிவிட்டது. அவர்களை ஒழிக்க வேண்டும் என்றே பேசிவந்தோம்...... எங்கள் மீது வந்த பழியைத் துடைக்க இன்னும் ஆயிரம் ஆண்டுகளாகும்"

அப்படியென்ன பேசினுர்கள்! ஈச்மென் போன்ற கொடுங்கோலர்கள் உருவாகுமளவுக்குப் பேசப்பட்டதுதான் என்ன!! 1922ல், ஜெர்மானிய மக்களை விழிப்புறச் செய்ய ஹிட்லர் பேசிய பேச்சைக் கொஞ்சம் கவனிப்போம், எனதருமை ஜெர்மானியரே! நம்மை மேகம்போல் சூழ்ந்திருக்கும் ஒரு ஆபத்தை, இத்தனை நாட்களும் நாம எண்ணிப் பார்க்கமறந்த பேராபத்தை, நம்மை அடியோடு அழிக்கும் பெரியதொரு பிர்ம்மாண்டமான ஆபத்தை, நாஜிஸ்டுகளாகிய நாம்தான் இன்று நாட்டுக்குச் சுட்டிக்காட்ட வேண்டியவர்களானேம்.

அது என்ன ஆபத்து என்ருல், அதுதான் யூதர்களுடைய போக்கு! இந்த யூதப்பேய்களுக்கு ஒரு முடிவுகட்டாவிடில், நமக்கு வாழ்வில்லை. இதை நான் சொல்லும்போது என்னைப் பார்த்து, யூதர்கள் சீறலாம். ஏழை மக்களைத் தூண்டிவிடுகிறேன் என்று சொல்லலாம், ஆம், நான் தூண்டித்தான் விடுகிறேன்! துயரத்தால் என்னவர்கள் வாடக்காரணம் என்ன? துடிதுடித்து என் ஜெர்மானியர்கள் துயரம் அனுபவிக்கும்போது சுகமனுபவிக்க இந்த யூதர்கள் யார்? அவர்களால்தான் நாங்கள் இந்த அவதி அடைகிருேம், ஆகவே, நான் தூண்டித்தான் விடுகிறேன்"

மெயின் காம்ப் என்கிற தன்னுடைய சுயசரிதையில் ஹிட்லர், எழுதுகிருன்: "தேசீய வளர்ச்சிக் காரர்களான நாமே, ஒரு பெரிய காரியத்தைச் சாதிக்க வேண்டியவர்களானேம். (ஹிட்லருடைய கட்சியினர் பெயர் தேசீய சோஷியலிச இயக்கம் என்பதை!) இன்றைய உலகில் முதல் எதிரிகள் யார், என்பது விடாமல், தொடர்ந்து, எல்லா நாடுகளுக்கும் நாம் சொல்லிக்கொண்டேயிருக்கவேண்டும். மனித இனத்தின் நாசகால விரோதிகள், இந்த யூதர்கள். அவர்கள்தான் நம்முடைய சகல துன்பங்களுக்கும் காரணம். புகழோங்கிய நம்முடைய ஆரிய இனத்துக்கு நேர் எதிரிடையானவர்கள் இந்த யூதர்கள். அந்நிய நாடுகள் உணராவிடினும், இந்தப்பேருண்மையை நாம் புரிந்துகொண்டால்

(தொடர்ச்சி 9-ம் பக்கம்)

## ஈச்மென்: ஜெர்மானியர் கருத்து

யூதர்களைக் கொன்ற ஈச்மென்னின் வரலாற்றைப் படிக்கும்போது, எல்லா ஜெர்மானியரும் இப்படித்தானே என்று எண்ணத்தோன்றும்! அல்ல, அல்ல. ஜெர்மன் மக்களின் பெயரால் அதிகாரம் பெற்ற வெறியர்கள் போட்ட ஆட்டமே தவிர, இக்கொடுமைக்கு ஜெர்மானிய மக்கள் எல்லாம் காரணமல்ல. இப்படியொரு இழிபெயருக்கு தமது மக்கள் ஆளாகியதைத் துடைக்க ஜெர்மானியர் பெரிதும் முயன்று வருகின்றனர். மேற்கு ஜெர்மனியின் சான்சலரான அடினுர் "நாஜிக் கட்சியில் சேர்ந்த ஜெர்மானியர் மிகக் கொஞ்சம் தான்," என்று வாதாடி வருகிருர், அடிக்கடி

"மக்கள் ஜெர்மானியர்களைப் பற்றித் தவருக மதிப்பார்களே என்று பயப்படுகிறேன்...ஹிட்லரால் நாங்கள் பெற்ற பேர் போதும்...எங்களுக்கும் மனித இதயம் உண்டு," என்கிருர், அடினுர். ஈச்மென் வழக்கு ஆரம்பமானபோது மேற்கு ஜெர்மன் போர் குற்றவாளிகள் அலுவலகம, 80,000 ஜெர்மானியர் மட்டுமே இப்படுகொலையில் பங்குகொண்டதாக அறிவித்தது! ஹிட்லர் உண்டாக்கிய வெறியால் தங்கள் சமூகமே பழிதூற்றப்படுவதை எண்ணி வருந்தாத ஜெர்மானியர் இல்லை!

ஜெர்மானிய ஏடுகள், ஈச்மென் வழக்கைப் பற்றி நிறைய வெளியிடுகின்றன. ஈச்மென்னுக்குத் தண்டனை கொடுத்தாலும் நமக்கென்ன என்றே ஜெர்மானியர் அலட்சியம் காட்டுவதாக, "நியூஸ்வீக்" எனும் அமெரிக்க ஏடு, சொல்கிறது. "அவன் செஞ்ச கொடுமைக்கு நாங்க என்ன செய்வோம்?" என்பதே ஜெர்மானியிலுள்ள ஏழைகளின் கருத்தாகும்!!

அறப்போர்
ஆசிரியர்: அரங்கண்ணல்
ஒளி - 1 வெள்ளி 30-6-61 கதிர் - 17

# அமைப்புச் செயலாளரின் அரியயோசனை !

தியாகராய நகர் பகுதியின் சார்பில், இந்தக் கிழமை, சென்னை கோடம்பாக்கத்தில் கூடிய கிளைக்கழகச் செயலாளர்கள், பகுதியிலுள்ள கவுன்சிலர்கள் ஆகியோரடங்கிய கூட்டமொன்றில் பேசிய நமது அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் அரியதொரு யோசனையை வெளியிட்டார்கள்.

இரவு இரண்டு மணிவரை நடந்த அக்கூட்டத்தில், எல்லாதரப்பட்ட கருத்துக்களும், கொள்கை சம்பந்தமான விளக்கங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இவ்வண்ணம் ஆங்காங்கும் அடிக்கடி தோழர்கள் கூடுவதும், கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதும், பரவசத்துக்குரிய காட்சியாகும். பல்தரப்பட்டக் கருத்துக்கள் மோதும் சனநாயகக் கூடமான திராவிட முன்னேற்றக் கழகத்தில், கருத்துக்களும் கழகத்தை எப்படியெப்படி வளர்க்கவேண்டுமென்பதில் எண்ண வேறுபாடுகளும் எழுதல் இயற்கையே. இவையாவும், கலந்து பேசும்போது தெளிவடையும்; செயல்படுவதிலும் புத்தார்வம் பிறக்கும். இத்தகு பணியினை, சென்னையில் மட்டுமின்றி, செல்லும் இடந்தோறும் நமது அமைப்புச் செயலாளர் அவர்கள் ஆற்றிவருவதாகக் கேள்வியுற்று அகமகிழ்கிறோம்! இத்தகைய உள்ளத்து ஆர்வமும், ஒழுங்கான பணி, செயலும் தொடருமானால், குரலெழுப்புவோருக்கும் குளறுவாயருக்கும் நாம் ஏன் அஞ்சிடல் வேண்டும்!!

கழகத்தின் கொள்கைகள் நம்மைக் குடும்பமாக்கியிருக்கிறது. மனைவி, மக்கள், சுற்றம் முதலியோரைக்கூடத் தியாகம் செய்யும் உணர்வோடு நாம் பாடுபடுகிறோம். தியாகராயநகர் பகுதிக் கிளையின் அவைத் தலைவராகப் பணியாற்றும் தோழர் குமார், செயலாளராகப் பணிபுரியும் சைதை சம்பந்தம் இருவரும் சீமான் வீட்டுச் செல்லப்பிள்ளைகளல்ல! தோழர் சம்பந்தம், கழகத்துடன் நீண்டநாள் தொடர்புகொண்ட நெசவாளத் தொழிலாளி. இருவரும், உழைத்துப் பிழைக்கும் நம்மைப் போன்ற சராசரித் தோழர்கள்தான்! எனினும் நாள்தோறும் காலையிலும் மாலையிலும் இரண்டு சைக்கிள்களில் ஏறியபடி கோடம்பாக்கமா—மாம்பலமா—சூளைமேடா—தியாகர் நகரா—ஏரிக்கரையா—மடுவங்கரையா—வடசைதையா என்று அவர்கள் வட்டமிடுவதைக் காணும்போது, “வாழ்க்கைக்கு இம்மணிகள் என்ன செய்கிறார்கள்?” என்றே எவரும் எண்ணுவர். கழகத்தின் பெயர் சொல்லி நிதி திரட்டி அதைச் செலவழித்துவிட்டுத் திருப்பிக் கேட்டால், ‘வா! கோர்ட்டுக்கு’ என்று முழக்கமிடும் ‘பெறுமானம்’ உள்ள பெரிய குடும்பத்துப் பிள்ளைகளல்ல! எனினும் உழைத்து வரும் ஊதியத்தில் ஒரு பகுதியினைக் கழகத்துக்கெனவும் செலவிட்டு, கட்டிக் காக்கும் வகையில் பணிபுரிகின்றனர்.

அவர்கள் மட்டுமல்ல, இந்தப்பகுதியின் கிளைக் கழகச் செயலாளர்களும், கவுன்சிலர்களான ஜேசுபாதம், சா. கணேசன், கோபால், இரா- சடகோபன், அண்ணாமலை, பொன்னுசாமி, முதலிய தோழர்களும் வசதிபடைத்தவர்களல்ல!! வாணிபம், அலுவலகத்தில் கணக்கர், போன்ற பணிகள் மூலம், குடும்பமெனும் தேரை ஓட்டுவோர்தான்.

இதே நிலைமையில் வாழ்வோர்தான், சென்னைமாநகராட்சியின் ஏனைய பகுதிகளிலுள்ள கவுன்சிலர்களும், செயலாளர்களும்! உழைப்பாளர்களின் இருப்பிடமானதென்பதால் கழகத்தவர் வசதியற்ற நிலையில் இருப்பது ஆச்சரியமல்ல. அப்படி வசதியற்ற வாழ்விருந்தும், அந்த வாழ்விலும் நேரத்தையும் கைக்காசையும் செலவழித்துக்கொண்டு தினந்தினம் கழகம் கழகமென்று வலம் வருகின்றனரெனின், அவர் தம்மாட்டு ஏற்பட்டிருக்கும் பொதுப்பணியின் ஆர்வத்தை, பொருளறியாப் புல்லன்தான் கேலிசெய்வான்! பொதுவாழ்வின் தரத்தை அறிந்தோர் பொன்னே! மணியே! நறுமலரே! நல்லிதயங்கொண்ட தியாகிகளே! என்றே போற்றுவர்!!

அப்படிப்பட்ட அயர்வுறுச் செம்மல்களை அடிக்கடி அமைப்புச் செயலாளர் சந்திப்பதும், மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் கூட்டி விவாதிப்பதும், வட்டச் செயலாளர்கள் ஆங்காங்கே கிளைக்கழகச் கூட்டம் கூட்டிப் பேசுவதும்,மிகமிகப் பாராட்டப்பட வேண்டிய அரும் பணியாகும். எதுவும் கூடிப்பேசும் போதுதான் உருவாகும்! சில்லரைத் தகராறுகளோ, சிறுசிறு பூசல்களோ, வளரும்போது ஏற்படாதென்று யாரும் கூறமுடியாது, அவையாவும் ஒருவருக்கொருவர் உட்கார்ந்து பரிமாறிக்கொள்ளும்போது, காற்றுபோலப் பறந்துவிடும். சந்திக்காமலும்,வாதிடாமலும், மனப்புகையாக யிருப்பதுதான் கெடுதல், அப்படிப்பட்ட அமைதி, எந்தப் பொதுப்பணிக்கும் ஏற்றதுமல்ல! நல்லதுமல்ல!! நாமெல்லாம் அண்ணன் தம்பிகள்— ஒருமாபெரும் விடுதலைக்கு அர்ப்பணித்தவர்கள்—குடும்பமாகிவிட்டவர்கள்—என்பதற்கு அடையாளம், அடிக்கடிக் கூடிக்கூடிப் பேசுவதுதான் அண்ணா அவர்கள், காஞ்சியில் கூட்டிய கருத்தரங்கின் அந்தரங்கம் இதுதான்! அதனை மாவட்டந்தோறும், வட்டந்தோறும் ஏற்கனவே செயல்படுத்தி வருகிறார் நமது அமைப்புச் செயலாளர் என்று கேள்வியுற்ற நாம், அதன் அருமையையும் தேவையையும், கண்ணாரக் கண்டபோது நன்றாக உணர்ந்தோம்.

இந்த எழில் முயற்சியும் கூட்டுழைப்பும், பொதுத் தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கிற இச்சமயத்தில், அடிக்கடி ஏற்படவேண்டும்! அந்தந்தப் பகுதியிலுள்ள கழகத்தவர் பலரும் கூடிக்கூடிப் பேசிப்பேசி திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும்!! அப்படிப்பட்ட செயல்வகையில் ஒன்றாக நமது அமைப்புச் செயலாளர் வெளியிட்ட அரியயோசனை, “ஒவ்வொரு கிளைக்கழகமும் சார்பு மன்றங்களின் உதவியோடு, ஒவ்வொரு வீடாகப்போய் கழக நிதிக்கு வசூல்செய்ய வேண்டும்,” என்பதாகும், உள்ளபடியே, இது ஒரு உன்னத முயற்சியாகும்! சென்னைபேசின் பிரிட்ஜ் பகுதி செயலாளர் தோழர் சுந்தரம் முயற்சியில் ஒருநாள் கழகத் தோழர்கள் வீடு வீடாகப்போய் வசூலித்திருக்கிறார்கள். பெரிய வெற்றியாகவும், நமது தாய்மாரும் பெரியோரும் காட்டிடும் ஆதரவினை உணர்த்திடும் விதத்திலும் இது அமைந்திருக்கிறது. ஆகவே, இதுபோல, சென்னைமாநகரிலுமுள்ள கிளைகள் மட்டுமின்றி, ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள கிளைகளும் ‘ஒரு நாளை’க் குறிப்பிட்டுப் பணியாற்றுதல் சாலப் பயன்தரும் எனநம்புகிறோம்!



இதன் முக்கியத்துவத்தை நமக்கெல்லாம் உணர்த்தவே, அண்ணா அவர்களும், “நான் தெருத்தெருவாக ஒரு வண்டியில் உண்டியல் வைத்துத் தள்ளிக்கொண்டு போகப் போகிறேன்,” என்று கூறியிருக்கிறார்கள். அமைப்புச் செயலாளர் அவர்களும் அதையொட்டி வழங்கியிருக்கிறார், இந்த அரிய யோசனையை! செயல்படுத்துவோம்—ஒரேகல்லில் இருமாங்காயாக இது அமையுமன்றோ—என்று நமது அண்ணன் தம்பிகளுக்கு அறிவுறுத்துகிறோம்!!

## நன்றி

“அறப்போர்” ஏட்டில் தொடர்ந்து “கண்ணகி” எனும் பெயரில் வெளிவந்த கட்டுரைகள், மதுரையிலிருந்து வெளிவரும் “கண்ணகி” என்கின்ற பார்வர்ட் பிளாக் கட்சியைச் சார்ந்த ஏட்டிலிருந்து எடுத்துப் போடப்பட்டவையாகும்.

சிறந்த அரசியல் தெளிவும், நடையும் கூர்த்த மதியின் சிறப்பும் கொண்டியங்கிய அந்தக் கட்டுரைகளை நாட்டுக்கு வழங்கியதோடு, நாமும் வெளியிட்டுக்கொள்ள பெரிய மனதுடன் ஒத்துழைப்பு நல்கிய கண்ணகி ஏட்டின் ஆசிரியருக்கும், வெளியீட்டாளர்க்கும் ‘அறப்போர்’ தனது அன்பையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

அரங்கண்ணல்

நல்ல சரக்குள்ள வியாபாரி தன்னுடைய சரக்கின் மேன்மையை எடுத்துரைத்து விற்க முயல்வான்! 'நாணயமிழந்தவனே,' அவன் சரக்கு அசிங்கம் அது. சொள்ளைசொத்தை என்று சொல்லிக் கூவுவான்!! சரக்குநல்லது என்பதால், மக்கள் நம்மை நாடுவர் எனும் தைரியம், நாணயமுள்ளவனுக்கு இருக்கும். அவனிடம் நல்லசரக்கு இருப்பதுகண்டு மக்கள் போய்விட்டால் தன்னிடம் யாரும் வரமாட்டார்களே என்கிற அச்சத்தால், இழி செயலில் இறங்குவான், அழுகிய சரக்குள்ள ஆசைக்காரன்.

* * *

மூளை கெட்டவர்கள்— கோமாளிகள்— செருப்பாலடித்துக் கொள்கிறவர்கள்— சிந்திக்கத்தெரியாதவர்கள்— அரசியல் அறியாதவர்கள்— இப்படியெல்லாம், நம்மைப் பற்றி அள்ளி அள்ளிச் சொரிகிருராம், காமராசர் கருத்துமழையை, அதிலும் அண்ணு அவர்கள் தொகுதிக்கு சென்றபோது அவருடைய "ஆபாச அளவு" எல்லையை மீறிவிட்டதாம், அன்பர் இராசகோபால் எனும் நமது காஞ்சி கவுன்சிலரைக் கோமாளி என்ருராம்! குறை சொல்லப்போன மக்கள் பிரதிநிதியைக் கோமாளியென்பதோடு இக்குணளர் திருப்தியடையவில்லை—அண்ணுவிடம் பெரிதும் ஆசையும் மரியாதை கொண்ட பெரியவர்கள் வாழும் பரந்தூர் எனும் கிராமத்திற்குச் சென்று, அங்குள்ள மக்களிடம் கேட்டாராம், "அண்ணுதுரையைத் தேர்ந்தெடுத்தீங்களே. மந்திரி நான் வந்திருக்கிறேன் உங்கசார்பிலே குறையைச் சொல்ல அவர் இங்கேவந்தாரா," என்று காமராஜரோடு அண்ணு வரவேண்டுமாம்! "ஐயா, ஐயா! வள்ளல் பெருமானே அங்கே வாய்க்கால் சரியில்லை. இங்கே ரோடு சரியில்லை. கொஞ்சம்தயவுபண்ணுங்க" என்று பல்லிளிக்கவேண்டுமாம், இவரிடம்!! விருதுநகர் தொண்டராயிருந்த சுபாவம் மாறியிருக்கிறது, காமராஜருக்கு. திருவாங்கூர் மகாராஜா போல, போபால் நவாப்போல, திமிரோடு பேசியிருக்கிருர், "என் கூடவந்து, சொல்லவேண்டாமோ குறைகளை?" என்று. குறைகளையும் மக்களுடைய தேவைகளையும் தெரிவிக்க, இவர் கூடப்போனுல் போதும் எனில், ஏன் ஒரு சட்டசபை? ஆண்டுக்கு ஒருதரம் அய்யாவருவார் பரிவாரத்தோடு, ஆலமரடித்தடி மாநாடு போடுவார், அங்கே எல்லாக் குறைகளையும் எழுதிக் கொடுத்து விடலாம் என்ருல், எதற்கு ஒரு சட்டசபை? அங்கே எம்.எல்.ஏ, கள் தத்தமது கோரிக்கைகளைக் கூறவேண்டும, என்கிறமுறை? 'இவர் கூடப்போக வேண்டுமாம்' இப்படியொருபழக்கத்தை காங்கிரஸ் எம், எல். ஏக்கள் உண்டு பண்ணினுர்கள். மந்திரிகள் இப்படித் திரும்பினுல் எழுந்து நிற்பதும் அப்படித் திரும்பினுல் 'அய்யா வந்தேன்' என்று ஓடிக் காக்கா, பிடிப்பதும், அதைச் காட்டி "பெர்மிட்டா! 'சீவ்'; எனக்குத்தெரியும்" "காண்டிராக்டா! அன்னைக்கு வந்தப்போ என்னைப் பார்த்துக் கனைத்தாரே, கவனமிருக்கா?" என்று சொல்லி, பிசினஸ், செய்வதும் அவர்கள் வாடிக்கை. அதையே அரசியல் அளவு கோலாக்கிவிட்டார் போலும் அன்பர் காமராசர்! அவரிடமிருந்து அரசியல் நெறியினையும், யாரார் எப்படியெப்படி நடக்கவேண்டும் என்கிற பண்பினையும் எதிர்பார்ப்பது வீணனதென்ருலும்; சராசரி விவேகம் கூட இந்தச் 'சத்புத்திரருக்கு' வராதது கண்டு உண்மையில் வியப்படைகிருேம்!!!

மக்களிடம் பழகுவதிலும், அவர்களோடு இரண்டறக்கலந்து வாழ்வதிலும், இவர் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டிய கட்டத்தில் அண்ணு இல்லை. வேற்றுக் கட்சியிலிருந்தாலும் சனநாயகக் கோட்பாட்டால் அமைச்சராகிவிட்டவர்களை மதிக்கவேண்டும் என்கிறபோதனையை அவர் சொல்லிக் கொடுத்துத் தெரிந்து கொள்ள வேண்டிய கூட்டத்திலும், அண்ணு இல்லை. மாற்ருர் தோட்டத்து மல்லிகையென்பதற்காக, "சேச்சே! அது மலரல்ல, மலம்!!" என்று கூறுவது காமராஜர் வளர்த்திருக்கும் அரசியல் பண்பு. எமது காஞ்சி கோமான், காஞ்சி ரங்காயாயினும் மாற்ருரை மதித்திடும் மாண்பாளர். அந்த உயர்ந்த பண்பினுல்தான் "எம். எல். ஏ ஆனதும், காங்கிரஸ் முதல் மந்திரியாச் சேளனவும் கருதாமல் காமராசரை அழைத்துவந்து தன்னுடைய தொகுதியில் மாலையிட்டு வரவேற்பளித்து, பாராட்டினுர் அண்ணு! தன்னுடைய தொகுதி மக்களைக் கொண்டே, என்னென்ன குறைகள் உண்டோ அத்தனையையும். "மகஜர்" களாகக்கொடுக்கச் சொன்னுர், முதலமைச்சரிடம்!!

ஆண்டுகள் ஐந்து ஓடிவிட்டன. அண்ணு காட்டிய பண்பிற்குச் செலுத்தும் மரியாதையாக, மக்கள்தந்த 'மகஜர்' கள்யாவும் கவனிக்கப்பட்டவை என்று கனவான் காமராஜரை, அரசியல் பெருந்தன்மை காரணமாக, அண்ணு அதட்டிக் கேட்காவிடினும் நாடுகேட்காதா? நாமென்ன மரக்கட்டைகளா, இந்த 'மாணிக்கம்' மகஜரைப் பெற்றபோது தந்த உறுதிமொழிகளை மறக்க!! நேரடியாகத்தந்த மகஜர்கள் மண்ணுங் கட்டியாக்கப் பட்டது இருக்கட்டும், காஞ்சிபுரம் தொகுதிசம்பந்தமாக அண்ணு சட்டசபையில் அடிக்கடி எடுத்துவலியுறுத்திவரும் எதனைச் செய்தார் இவர்? வேறெதுவும் வேண்டாம். பாலாற்றில் நீர் கொணர, இவருடைய சர்க்கார் எடுத்த முயற்சி என்ன? "அண்ணுதுரைக்கு ஓட்டுப் போட்டீங்களே? அவர் கொண்டாத் துட்டாரா பாலாத்திலே தண்ணி!" என்று மக்களைப்பார்த்துக் கேட்டாராம், காமராஜர், ஒரு கிராமத்தில்,

சிரிக்காதீர்கள்! அரசியல் நாகரீகம் ஆண்டு பலவாக அமைச்சராயிருந்தும் அவருக்கு வராதது, அவர் குற்றமல்ல— கூடயிருப்போர் அவரை "மாமேதை"யாக ஆக்கிவைத்திருக்கும் வினையாகும்!!

# 'சரக்கு' மோசமானதால் 'சண்டிய'ராகிருர்

சட்டசபை உறுப்பினர் மக்களுடைய குறையை, எடுத்துச் சொல்வார் சட்டமன்றத்தில். அப்படிச் சொல்லத்தான் சட்டசபை. அந்தக் குறையைக் கேட்டு, விருப்பு வெறுப்பின்றி, மக்களுக்கான நன்மையைச் செய்யவேண்டியது, ஆளவந்தவர்களின் பொறுப்பு. அதை விட்டுவிட்டு, "அவர் கொண்டாந்துட்டாரா? ஏ! ஜனங்களே! என்ன நினைச்சீங்க என்னை" என்று சண்டியர் மொழியில் சங்கநாதம் செய்வதென்ருல், அதற்குப் பெயர் சனநாயகமா! இல்லை, அரசியலா!

அண்மையில் காஞ்சியில் புதிதாக ஒரு பஸ் நிலையம் கட்டப்பட்டது. அதற்கு யார் பெயரிடுவது என்கிற பிரச்னை, நகராட்சி மன்றத்தில் ஏற்பட்டது. உலக உத்தமர் காந்தியடிகளின் பெயரை வைத்துவிடலாம் என்று நமது உறுப்பினர்கள் ஒரு தீர்மானம் கொடுத்தனர்! உலகம் போற்றும் உத்தமர் — அறவழியில் அரசியலை நடத்திய அன்பாளர்—இழிச் சொல் வீசியறியாத இன்முகம் கொண்டவர் என்பதால் அந்த இடத்துக்கு அவர் பெயரை இடவேண்டுமென்றனர், தி. மு, க. உறுப்பினர்கள்! அதுகூடாது என்று கூறினர் காங்கிரசுக்காரர்கள்!! ஆம் தோழர்களே, ஆமாம். காந்தியடிகளின் பெயருக்குப் பதில் யாருடைய பெயரை வைக்கலாம் என்று சொன்னுர்கள் தெரியுமா? காமராசருடைய பெயரைச் சொல்லியிருப்பார்கள் என்று நீங்கள் கருதலாம்! காந்தியடிகளுக்குக்கூட நாடெங்கும் ஊரெங்கும் நினைவுச் சின்னங்கள் இருக்கின்றன—தொண்டனுயிருந்து தலைவனுக விளங்கும் காமராசரின் பெயரை வைக்கலாம் என்று அவர்கள் வாதாடியிருப்பார்கள் என்று நீங்கள் எண்ணலாம்! அல்ல! அல்ல!! ஓ. வி. அளகேசன் பெயரை வைக்கவேண்டுமென்று தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றினர். அளகேசனுர் அடிக்கடி வந்து போகும் ஊர் காஞ்சிபுரம். அதுவும் கடந்த பொதுத் தேர்தலுக்குப்பிறகு, தனக்கு வேண்டியவர்களெல்லாம் கழகத்துப் பக்கம் போய்விடக் கூடாதே யென்று சகலர் பக்தவத்சலனுருடன் அடிக்கடி 'ஜயம்' செய்கிருர். நகராட்சி தேர்தலுக்குக்கூட பணமூட்டையுடன் வீடு வீடாக அவர் ஏறி இறங்கியதாகச் சொன்னுர்கள். அவரைப்பற்றி காஞ்சி மக்கள் நன்று அறிவார்கள். அவருடைய பெயரைக் கேட்டாலே, "ஆ! கூட்டத்தில் ம...ர்" — என்ருரே அவரா, என்று வீட்டுக்குள்ளிருக்கும் தாய்மார்கள் கூடச் சொல்வார்கள்!! அது போதாது, அந்த அரசியல் கண்ணியவானைப் பற்றிப் போகும்போதும் வரும் போதும் பொதுமக்கள் எண்ண வேண்டுமென்ருே, என்னவோ. பிடிவாதமாக இருந்து காந்தியடிகள் பெயர்கூட வேண்டாம் — அளகேசன் பெயர் வேண்டும் என்று வைத்திருக்கிருர்கள்!

"ஐயா, ஐயா இது என்மீது உள்ள அன்பைக் காட்டும் அடையாளமல்ல. அவமானப்படுத்தும் அறிகுறி. அண்ணல் காந்தியடிகளின் பெயருக்கு முன்னுல் நான் சுண்டைக்காய்?" என்று தமிழ்நாடு காங்கிரசுத் தலைவராக விளங்கும் அவர் கட்டளை போட்டிருக்கலாமன்ருே, தன் கட்சியினருக்கு! ஆசை, யாரை விட்டது. அதனுல் ஆனந்தத்தோடு வாய்மூடி மௌனியாகி அனுமதித்திருக்கிருர். "அளகேசன் பஸ் நிலையம்" என்கிற பெயர் விளங்குகிறது. அதைப் பார்த்தபோது முதலில் எனக்கே அவர் "கேசத்தைப் பற்றிச் சொன்னவாசகமே கவனத்துக்கு வந்தது. மக்கள் மனதிலும் — அந்த 'மகானுபவரை'ப் பற்றியும் அவர் பேசியதைப் பற்றியும் என்றென்றும் அந்த பஸ் நிலையம் கவனமூட்டிக் கொண்டிருக்கும்!! ஆனுல், அடக்கம் வேண்டாமோ ஒரு அரசியல்வாதிக்கு? அதுவும் காந்தியடிகள் பெயரைத் தன் கட்சியினரே தோற்கடித்தது கண்டு அவமானப்பட்டிருக்க வேண்டாமோ? தீர்மானம் கொண்டுவந்த தி. மு. கவின் அரசியல் பெருந்தன்மையை வாயாரப் புகழ்ந்திருக்க வேண்டாமோ? அதை எடுத்துச் சொல்லி தன் கட்சியினரைத் திருத்தியிருக்க வேண்டாமோ? அளகேசன் அவர்கள் அப்படியென்ன செய்தார், காஞ்சிக்கு! சேவை செய்தவர்களோ சிறந்தவர்களோ, அளகேசனைவிட யாருமில்லையா அங்கே! உழைத்துச் சம்பாதித்தப் பணத்தையெல்லாம் நிலமாக வாங்கி, அந்த நிலம் பூராவையும் பச்சையப்பன் கல்லூரிகட்ட இனமாக அளித்து, இறந்தார் வள்ளல் கந்தசாமி! அக்கல்லூரிக்கு ஒரு செங்கல் கூடக் கொடுக்காதவர் அளகேசன் — செங்கற்பட்டுப் போகும்போது காரிலிருந்தபடித் திரும்பிப் பார்த்திருக்கக்கூடும். இசைமேதை நாயனுப் பிள்ளை அவர்கள் இருந்த காஞ்சி, வித்துவான் வேணு கோபாலர் எனும்தமிழுக்குசேவைசெய்யும்புலவர் இருக்கின்றஊர் அளகேசனைவிடக்காங்கிரசுககுப்பாடுபட்டு, இன்னும்பலர் மதிக்கும் நிலையில் பொது உளத்துடன் வாழும் டாக்டர் சீனுவாசன் இருக்கின்ருர். சொல்லியிருக்க வேண்டாமோ அளகேசன், "அவர்கள் பெயர்களை வையுங்களய்யா! என் பெயரை வைத்தால் பெரிய காமெடியாயிருக்கும்!!" என்று.சொல்லாதது மட்டுமல்ல, அந்தப் பெயரை வைத்த தனது அன்புக்குரிய நண்பர்களை பாராட்டி குலவிக் கொஞ்சி. உலா வருகிருர்.

அப்படிப்பட்ட பெருந்தன்மையாளரையும்கூட அழைத்துக் கொண்டு போயிருக்கிருர் காமராஜர். அண்ணுவின் தொகுதிக்குள்! அப்படியென்ருல் தமிழ் மொழி பிய்த்துப் பிய்த்து எடுக்கப்பட்டிருக்குமே-அரசியல் நாற்றம் அளவுக்கு மீறியிருக்குமே— என்று நீங்கள் கேட்கலாம். ஆமாம் தோழர்களே, ஆமாம்! காமராசரும் அளகேசனுரும் போட்டா போட்டி நடத்தியிருக்கிருர்கள். போன இடங்களில்அண்ணுவையும் தி. மு. கவையும் தாக்கிப் பேசுவதில். அவர்கள் பேசப் பேச, "பாரய்யா! காந்தியடிகள் காங்கிரசுக்குப் பாடுபட்டவர். இருந்தாலும் நல்லவர் என்பதால் யாருக்கும் மதிப்புக் கொடுக்கிறவர் நமது அண்ணு. இதே காமராசரின் பொதுச் சேவையை மனமாரப்பாராட்டியவர் அண்ணு. அவரைப் போய், பஸ் ஸ்டாண்டுக்குத்தன் பெயரை வைக்கச் சொன்னவரும், அவரைக் காங்கிரஸ்தலைவர் ஆக்கினவரானகாமராசரும் இப்படி வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டுகிருர்களே" என்று மக்கள் எண்ணுமலாயிருந் திருப்பார்? அதிலும் காஞ்சித் தொகுதி மக்கள் எப்படிப்பட்டவர்கள்! அதனுல், இவர் தம் பேச்சினை, எள் முனையளவுக்குக்கூட நாம் பொருட்படுத்தத் தேவையில்லை—குணமும் சேவையும் மக்களுக்குத் தெரியும்! புரியும்!!

*

காமராசருடைய அரசியல் தொண்டினையோ, அவர் காங்கிரஸ் கட்சிக்கு மனமாரப் பாடுபடுவதையோ, நாம் உணராதவர்களல்ல. கல்வியறிவு அதிகம் இல்லாதவராயினும் சாதுர்யத்தால் சகலரையும் எடுபிடிகளாக வைத்துக்கொண்டு நாட்டாண்மைப் புரியும் அவருடைய சாமர்த்தியம் கண்டு நாமும் வியக்காமலுமில்லை. ஆனுல், அப்படிப்பட்டவருக்கு தேர்தல் நெருங்க ஆரம்பித்ததும் மனதுக்குள் எவ்வளவு பயம் அடிக்கிறது என்பதையே போகுமிடமெல்லாம் நம்மைப் பற்றி அவர் புலம்புவது எடுத்துக்காட்டுகிறது,

என்னடா எங்கே போனுலும் இந்தத் தி. மு. க. காரர்களாயிருக்கிருர்கள் — காங்கிரசுக்கு அடுத்தபடி ஒரு கட்சியில்லை என்று நினைத்திருந்தோம், காங்கிரசையே வீட்டுக்கு அனுப்புமளவுக்குக் கழகம் வளர்ந்துவிட்டதே என்கிற எரிச்சல் அதிகமாக அதிகமாக அவரும் 'சாதாரண நிலை'க்குப் போகிருர்! சரக்கு அழுகலானவனுக்கு வரும் ஆத்திரம் அவருக்கு வந்து, "அய்யோ! அய்யோ! அவன் யார் தெரியுமா? அவர்கள் யார் தெரியுமா? சம்பத் இல்லை தெரியுமா! குள்ளமானவர் அண்ணுதுரை அறிவீரா!" என்று ஏதேதோ, எடுத்தெரிய ஆரம்பித்திருக்கிருர், பொதுமேடைகளில். காஞ்சித் தொகுதியில் மட்டுமல்ல 'கனம்' காமராசர், செல்லுகின்ற ஏனைய மாவட்டங்களிலும் தான் என்னசெய்தேன் என்று விளக்குவதற்குப் பதில், "மகாசனங்களே! இந்தத் தீனுமுனுக்காரங்களை நம்பாதீங்க......" என்றே ஆரம்பித்து, கடைசி வரையில், அதே பாணியில் பேசி முடிக்கிருர்.

பதினைந்து ஆண்டுகள் அரசாண்ட ஒரு கட்சி, எதிர் கட்சி ஒன்றை ஏசியே தேர்தல் பிரச்சாரம் செய்ய வேண்டிய கட்டத்துக்கு வருகின்றதென்ருல், என்ன பொருள்?

எடுத்துச் சொல்லக் கூடாதா தான் சாதித்தது—தன் கட்சியுடைய வேலைத் திட்டம்—தங்கள் ஆட்சியில் மக்களுக்கேற்பட்ட நன்மைகளை. உயர்ந்தோரின் போக்கு அதுவாகத்தானே இருக்கவேண்டும்.

மகாசனங்களே! இந்தப் பதினைந்து வருடமாக நாங்க ஆண்டதால் இப்போது நீங்கள் ஒன்றுக்குப் பத்தாகப் பணம் கொடுத்தால்தானே, எந்தச்சாமானும் கிடைக்கும். இப்படி விலைகளை ஏறவைத்த காங்கிரசுக்குப் போடுங்கள் ஓட்டு! என்ரு கேட்கமுடியும்?

ரூபாய்க்கு இரண்டு படி விற்ற அரிசியை ரூபாய்க்கு ஒருபடி கிடைக்கும்படிச் செய்திருக்கிருேம்! இவ்வளவு அழகாக உழவுத் தொழில் குறையபாடுபட்டிருக்கும் எமக்கே உங்கள்ஓட்டு! ஸ்என்ரு கேட்கமுடியும்?

வெள்ளைக்காரன் சுத்த முட்டாள்! அவன், இப்போது பிரிந்து போயிருக்கிற ஆந்திர கேரளப் பகுதி எல்லாவற்றுக்கும் சேர்த்து 16 கோடி ரூபாய்தான் வரி வசூலித்து ஆண்டான், எங்கள் 15 ஆண்டுக் கால ஆட்சியில், இந்த வரியை 82 கோடியாக்கினேம். இந்தச்சாமார்த்தியம் காங்கிராசராகிய எங்களைத் தவிர யாருக்குவரும்?— ஆகவே போடுங்கள் எங்களுக்கு ஓட்டுஎன்ரு கேட்க முடியும்!

ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் நாட்டைப் பொன்னுடாக்க போவதாகச் சொல்லி இதுவரை அந்நிய நாடுகளிடம் கடனுக வட்டிக்கு 6750 கோடி ரூபாய் வாங்கி செலவழித்த தீரர்கள்! அப்படிச்செலவழித்து வெள்ளையன் காலத்தைவிட வாழ்க்கையை பாலைவனமாக்கியிருக்கும் பராக்கிரமசாலிகள், நாங்கள்!!— ஆகவே எமக்கு அளியுங்கள் ஓட்டு என்ரு கேட்க முடியும்?

6750 கோடி கடன்-இலவசமாக அந்நிய நாடுகளிடம்யாசகம் பெற்றது இதுவரை 636 கோடி—இவ்வளவும் போதாதென்று மாநிலஅரசுகளும் டில்லியும் எழுப்பியுள்ள கடன் பாண்டுகள் பலகோடி — சிறு சேமிப்பு என்ற பெயரால் அதிகாரத்தைக்கொண்டு வசூலித்தது பலகோடி-பிரைஸ்பாண்டு என்ற லாட்டரி சீட்டு மூலம் வசூலிப்பது பலகோடி—இப்படியெல்லாம் கிடைத்த பணத்தைக்கொண்டு ஆடம்பரம்— அதிகாரத் திமிர் — நிர்வாக ஊழல்—பொறுப்பற்ற செயல்-ஆகியவைகளால் போட்ட திட்டங்களின் 30 சதவிகிதப் பலனைக்கூட பொதுமக்கள் பெறவில்லையென்றுநிபுணர்கள்கண்டிக்குமளவுக்கு காங்கிரசாராகியஎங்களைத்தவிரயாரால் முடியும்?—ஆகவே, மாட்டுப் பெட்டிக்கு ஓட்டளியுங்கள் என்ரு கேட்க முடியும்!

இதுவரை போட்ட இரண்டு **ஐந்தாண்டுத் திட்டங்களால்** ரூ 7156 கோடி விரயம் செய்துள்ளோம்—இப்போது மூன்ருவது திட்டம் என்ற பெயரால் 10 ஆயிரம் கோடி ரூபாய்செலவழிக்க முடிவு செய்துள்ளோம் இப்படி கோடி கோடியாய்க் கொட்டி அழுது அழுது திருவோடு தூக்கும் நிலைமைக்கு நாட்டை ஆக்கிடும் 'திறமைசாலிகள்' நாங்கள்!— என்று சொல்லி ஓட்டுக் கேட்டால் மண்ணைத்தானே போடுவர், மக்கள்?

இதுவரை இவர்கள் வாங்கியுள்ள கடன், நாட்டின் மக்கள் தொகைக்கேற்ப தலைக்கு சுமார் 170 ரூபாய் ஆகிறது! ஆம்! தோழர்களே, ஒரு நபருக்கு கிட்டதட்ட 170 ரூபாய் வீதம் கடன் வாங்கி செலவழித்திருக்கிருர்கள் அந்தப் பணத்தை அவரவர்க்கும் பங்கிட்டு அளித்திருந்தால்கூட நன்ருயிருக்கும் — நாட்டைச் சுபீட்சமாக்கப் போகிருேம் என்று சொல்லி பண முதலைகளைக் கொழுக்கச் செய்தது தவிர, என்ன சாதித்திருக்கிறது காங்கிரசாட்சி? பரப்பளவை வைத்துக் கடன் வாங்கிய தொகையைக் கணக்கிட்டால் ஒரு சதுரமைலுக்கு 60000 ரூபாய் வீதம் ஆகிறது! எந்த இடம் இந்தப் பணத்தைப் பெற்றது? இவ்வளவு ரூபாயும்ஒழுங்காகசெலவழிக்கப்பட்டிருந்தால் உன்னதப் பூங்கா ஆகியிருக்குமே நாடு!!

புள்ளி விபர உண்மைகளை
பொதுமக்கள் அறியார்!
அறிந்திடின் பொங்காதோ
அவர் மனம்?
வெடிக்காதோ ஆத்திரம்?

—அப்பப்பா! இதையெல்லாம் எடுத்துக் சொல்லுகிருேம் நாம். என்ன பதில் சொல்ல முடியும் காமராசர்? அவருடைய கனமான பரிவாரம்தான் இதற்கெல்லாம் என்ன சான்றுகளைத்தர முடியும்? தைரியமிருந்தால் சொல்லலாம், இத்தனை கோடிகளையும்நானுசெலவழித்தேன், டில்லியன்ருேஎன்று! அப்படிச் சொன்னுல், அப்படிப்பட்ட டில்லியின் உறவு ஏனய்யா என்று நாம் கேட்போமென்பதால் எதுவும் பேச முடியாது, "ஏ! ஏ! அண்ணுதுரைக்குகால்குட்டை... கழுசடைகள் இந்த தி. மு.கக்கள் ...பார்த்தீங்ளோல்லியோ சம்பத்தை...பெரியார் என்ன சொல்ரார்னு கேளுங்க, அவர் வாக்கு வேத வாக்கு..." என்று போகுமிடமெங்கும் திட்டுகிருர் காமராசர்! தாக்கு தாக்கென்று அடிவயிற்றிலிருந்துவரும் ஆத்திரத்தோடு குமுறுகிருர்! அப்படிச் சொல்லி தங்களுடைய காங்கிரசாட்சியின் தவறுகளைப் பற்றி மக்கள் கேட்காமல் விட்டால்போதும் என்பது அவர் கருத்து! சண்டியராகிருர்—சண்டைக்குப் போகிருர் —சரமாரியாகக் கத்துகிருர்— 'சரக்கு' மோசமான தன் விளைவு! தேர்தலுக்கு நாமெல்லாம் திட்டம் போட்டு வேலை செய்யத் துவங்கிவிடின், இன்னும் வேடிக்கையான ஆட்டங்களையும் பேச்சுகளையும் காமராசரிடமிருந்து அனுபவிக்கலாம் நாம்!!

—0—

## மௌன நாடகம்

அண்மையில் ருஷியத் தலைவர் குருசேவும் அமெரிக்கத் தலைவர் கெனனடியும் சந்தித்தார்களல்லவா? அப்போது அமெரிக்கத் தலைவர் 'கான்ஸ்டிடியூஷன' என்கிற தமது புதிய கப்பலொன்றின் 'மாடலை'ப் பரிசாக அளித்தாராம் குருஷேவுக்கு! பிரம்மாண்டமான பெரியதொரு போர்க் கப்பலாம், இது!

பல புதுமைகடளுன் போராடும் கருவிகள் பொறுத்தப் பட்டதாம். "பாருமய்யா பாரும்' இப்படிப்பட்டப் போர்க் கப்பல்கள் கட்டுகிற அளவுக்கு எமது அமெரிக்கா முன்னேறியிருக்கிறது!!" என்று குறிப்பிட்டுச்சொல்லக் காட்டப்பட்டதாகக் கருதினுரோ என்னவோ, குருசேவ், பதிலுக்கு கென்னடியின் மனைவிக்கு ஒரு நாய்க்குட்டியை அனுப்பியிருக்கிருர், பரிசாக! சாதாரண நாய்க் குட்டியல்ல! வான வெளிக்குப் பயணம்போய்வந்த 'ஸ்டிரெல்கா' என்கிற நாய், இரண்டுமாதங்களுக்குமுன்பு, போட்டக் குட்டியாகும் இது!

இப்பரிசு எப்போதும் கென்னடியின் மனதில், ருஷியாவின் வானவெளிச் சாதனையை நினைப்பூட்டுமல்லவா? ஆனுல் இருவரும் மௌனமாகவே பரிசுகளைப் பரிமாறிக்கொண்டிருக்கிருர்கள்!!




"பெரிய ஆள் சார் நீங்க! எவ்வளவு அருமையா உங்கத் தோட்டத்தை அலங்கரித்து, உணவு ஏற்பாடுகளும் செய்து ஒத்துழைத் திருக்கிங்க!!", என்றுகாஞ்சிகருத்தரங்குநடக்கப் பேருதவி புரிந்த அ. க. தங்கவேலர் எம். எல். சி—யை நான் பாராட்டிக் கொண்டிருந்தபோது ஆசிரியர் கண்டு விட்டார். 'புதிய கட்சி' துவங்கியது முதல் என் பேட்டியைப் போட இடமில்லையப்பா என்று அவர் சொன்னதால், அவர்மீது எனக்குக் கோபம். முகத்தைத் திருப்பிக் கொண்டேன். "என்னய்யா நிருபரே! இப்படிக் கோபிக்கலாமா? அண்ணனும் தம்பியும் போல் பழகிவிட்டு, அதுவும் தேர்தல் வருகிற நேரத்தில் எவ்வளவு செய்திகள் கிடைக்கும்,கொண்டு வந்து கொடுப்பதைவிட்டு......" என்று ஆசிரியர் என்னிடம் குழைந்தார். உச்சிக் குளிர்ந்தது எனக்கு. "ஆ! இப்போதே போகிறேன்", என்று அருமையான அந்தத் தென்னஞ்சோலையை விட்டு, உயரக் கிளம்பினேன்.

*

"பார்த்தாயா என் சாமார்த்தியத்தை!", என்று ஒருவர் கூவிக் கொண்டிருந்தார்.

ஒரிசாவின் முதலமைச்சராக விளங்கும் பட்நாய்க் என்பவர் என்று தெரிந்தது. ஒரிசா என்றாலே, மகதாப்புடைய கவனம்தான் யாருக்கும் வரும். போன தேர்தலில், அங்கே காங்கிரசு மூக்கறுபட்டது, 'ஞான தந்திர பரிஷத், எனும் சிற்றரசர்கள் கட்சியால். அச்சமயம் அந்த ஞானதந்திர பரிஷத்தையும் சேர்ந்து, காங்கிரசின் கவுரவத்தைப் பாதுகாக்கப் பாடுபட்டவர், மகதாப், இந்த முறை நடந்த இடைத் தேர்தலில் காங்கிரசு சரியான தோல்வியடையும் என்று சொன்னார்! காங்கிரசிலுள்ள பெரிய தலைகளில் இவரும் ஒருவர். இவரை ஒரிசாவின் ஆச்சாரியார்! என்றால் பட்நாய்க்கைக் காமராசருடன் ஒப்பிடலாம்! சமயம் பார்த்துக் காங்கிரஸ் கமிட்டித் தலைவராகி, எப்போது கூட்டு மந்திரி சபையைக் கவிழ்க்கலாம் என்று சந்தர்ப்பம் பார்த்திருந்து, கவிழ்ந்த பிறகு முயன்று 140 இடங்களில் 82 இடங்களைக் காங்கிரசு வெல்லும்படிச் செய்திருக்கிறார்! அவரைப் பார்த்ததும், "என்ன சார்! எப்படி வென்றீங்க? என்ன இரகசியம்?", என்றேன். "நான் ஒண்ணும் அகில உலக அரசியலைப் பேசலேபார்! இதோ பாருங்கோ ஒரிசா மக்களே — நீங்க ஐந்தாண்டுத் திட்டத்தாலே, பலன் காணணுமுன்னா காங்கிரசுக்குத் தான் ஓட்டுப் போடணும். அப்பத்தான், நான் மேலே சொல்லி, நிறையப் பணம் வாங்கி உங்களுக்கு வேண்டியதைச் செய்வேன். காங்கிரஸ் சர்க்கார் இல்லாமே வேறொரு சர்க்கார் வந்தால், எங்க நேரு பணம் கொடுக்கமாட்டார்னு ஒரு போடு போட்டேன். இதே, என் தேர்தல் முழக்கம். இப்போப்பாரு, முதல் மந்திரியாகிவிட்டேன்!" என்று மும்முரமாகக் கிளம்பிக் கொண்டிருந்தார். கடந்த தேர்தலில் மூக்கறுப்பட்ட காங்கிரசு இப்போது எப்படி வென்றது என்று எண்ணி ஆச்சரியப்பட்ட நான், ஊருக்குள் கிளம்பி உலவப் போனேன்.

*

'அவர்தான் ஞான தந்திரக் கட்சியின் காரியதரிசி'—என்று ஒரு ஆளைக் காட்டினார்கள், அவர் பஸ் நிற்குமிடம் காத்துக் கொண்டு நின்றார். "என்னது! ஞானதந்திரக் கட்சியென்றால் சிற்றரசர்கள் கட்சி என்கிறார்கள். அதன் செயலாளர் பஸ் ஸ்டாண்டில் நிற்பதா? ஒருவேளை, இருந்ததையெல்லாம் தேர்தலில் இழந்து இந்தக் கதிக்கு வந்து விட்டாரோ!!", என்று சந்தேகப்பட்டேன். "அதெல்லாமில்லேய்யா! தேர்தல் நடந்த போதுகூட, ஒவ்வொரு ஊருக்கும் இவர் இப்படி பஸ்ஸில்ஏறித்தான் போக நேர்ந்தது. தேர்தலுக்கென்று எந்த ராஜாவும் பணம் கொடுக்கவில்லை, பணமில்லாமல் முடியுமா? அதேசமயம், பணத்தை, பட்நாய்க் தண்ணீர் பட்ட பாடாய், காங்கிரசுக் கட்சியின் சார்பில் வாரியிறைத்தார்! காசு கொடுத்துதான், காங்கிரஸ் ஓட்டுகளை வாங்கியது!", என்றார், ஒருவர். பெரும்பாலும் ஆதிவாசிகளையும், ஏழைகளையும் கொண்ட இடம், ஒரிஸ்ஸா. அங்கே தேர்தலின்போது ஒரு டில்லி மந்திரி "ரயிலைப் பார்த்திருக்கிறீர்களா?" என்றாராம். அந்த மக்கள் இதுவரை இரயிலையே பார்த்ததில்லையாம்!!! அங்கே ரோட்டைச் செப்பனிட வந்திருந்த ரோடு ரோலரைக் காட்டி, இதைப்போல இருக்கும் ரயில் என்றாராம் மந்திரி! "இதா? இதா ரயில்? இதிலே ஏறிக்கிட்டுப் போறதைவிட நடந்து போனா சீக்கிரம் நாங்க போயிடுவோம்...", என்றார்களாம், மக்கள். அப்படிப்பட்ட இடத்தில் வெல்ல, காசிருந்தால் யாரால் தான் முடியாது!!


*

"வெரிகுட்! வெரிகுட்!!",—என்கிற குரல் கேட்டதும், பழக்கமான குரலாயிருக்கிறதே என்று இறங்கினேன். வேறு யாரு மல்ல, பண்டிதநேருதான். 'குலு' என்கிற இடத்துக்குப் போய் விட்டு வந்ததால், குளு குளு குளு வென்று இருந்தார் பார்ப்பதற்கு. "என்னங்க! வணக்கம்!! நீங்க சொல்றது போல உங்க இந்தியா ஒண்ணும் 'வெரிகுட்'டா யில்லையே.........வெறியோடுவல்லவா விளங்குவது போலிருக்கு," என்றேன். என்னை முறைத்தார், "ஓ! நீ அசாமுக்குப் போய் வர்றே போலிருக்கு? ஆமாப்பா! அங்கே வங்காளிகளும் அசாமியரும் மொழியின் காரணமாக, அடிச்சுக்கிறதும், தாக்கிக்கிறதும் ரொம்ப, அவமானமாயிருக்கு. உனக்குத் தெரியுமே, அகில இந்தியாவிலுமுள்ள எல்லா எதிர்க் கட்சித் தலைவர்களையும் கூப்பிட்டு நான் விரைவில் பேசப் போகிறேன்," என்றார். "எதைப் பற்றி பேசுவது? ஏக இந்தியா என்பதற்கு அடிக்கடி ஏதாவது ஒரு இடத்திலிருந்து வேட்டு வெடித்துக் கொண்டேயிருக்கிறது, அதைப்பற்றித்தான்! எப்படி அது வராமல் தடுப்பது, எவ்விதம் ஒரே இந்தியாவை உண்டாக்குவது என்று ஆலோசிக்கத்தான்!!", என்றார். "உங்களுக்கும் இப்படி பொழுதுபோக்காக ஏதாவது செய்தால்தான் உற்சாகமாயிருக்கும் போலிருக்கிறது. ஏங்க, வீண்வேலை! மொதல்லே டில்லியைக் கலைங்க ...அதிகாரத்தை அந்தந்த மாநிலங்களுக்கும் கொடுங்க...எல்லாம் சரியாய்ப் போயிடும்," என்றேன். கையிலிருந்த மாம்பழத்தால் அவர் என்னை அடிக்க ஓங்கவே, அங்கிருந்து கிளம்பினேன்!!

*

"அடடா என்னருசி! என்ன ருசி!", என்று மாம்பழத்தை ரசித்துப் புசித்துக் கொண்டிருந்தார், இலங்கைப் பிரதமர் தோழியர் பண்டார நாயகா. எங்க

(11-ம் பக்கம் பார்க்க)



25—6—61 அன்று பூவிருந்தவல்லியில் நடைபெற்ற செங்கற்பட்டு மாவட்ட தேர்தல் நிதி சிறப்புக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் சி. வி. எம். அண்ணாமலை பேசிக்கொண்டிருக்கிறார். மேடையில் பொருளாளர் மு. கருணாநிதி, புரட்சி நடிகர் எம். ஜி. ஆர், கூட்டத்தலைவர் என். ஜி. கண்ணன் ஆகியோரைக் காணலாம்.




துரைசிங்கம் வீட்டில் அவருக்குத் துணையாக ஒரு வேலைக்காரன் இருந்தான். தன் பங்களாவுக்கருகில், அவனும் அவன்மனைவியும் வசிக்க சிறிய கல்வீடு, கட்டிக் கொடுத்திருந்தார் அவர். வேறுயாரும் பக்கத்தில் கிடையாது. கொஞ்ச தூரத்தில், வயலில்வேலை செய்யும் இரண்டொருவரின் கூரைக்குடிசைகள் இருந்தன. அந்த வேலைக்காரனையும் காணவில்லை. அவன் வீடும் பூட்டப்பட்டு இருந்தது. அருகேயிருந்தகுடிசைகளின் பக்கம்போய் நைசாக விபரம் கேட்டபோது, “மத்தியானம் ‘ஓ’ வென்று வேலைக்காரனும் அவன் மனைவியும் கத்திக்கொண்டு அழுதாங்க ...அவன் மனைவி ஒப்பாரிவைத்து மாரடித்துக்கொண்டு கத்தினாள்... அவ்வளவுதான் எங்களுக்குத் தெரியும்’ என்றார்கள், எப்படியிருக்கும்அருமைநாயகத்துக்கு? உண்மை! உண்மை!! இறந்துதான் போய்விட்டார், துரைசிங்கம். அதனால்தான் அவருடைய வேலைக்காரன் அழுதுபுலம்பியிருக்கவேண்டும்—என்று கருதினார் உடனே, இன்னொரு ஐயமும் வந்தது—ஆமாம்! என்னையும்

-தொடர் கதை-

அவரையும்தவிர, யாரும் வரவில்லையே அங்கே, எப்படி வேலைக்காரனுக்கு அவர் இறந்தது தெரிந்திருக்கமுடியும்? அப்படியே தெரிந்திருந்தாலும் இந்நேரம் ஊரெல்லாம் அல்லோலப்பட்டிருக்காதா?—கொஞ்சம், தெம்பு வந்தது, அதேசமயம், ஏன் அவன் அழுது புலம்பினான்? ஐயாவுக்கு காத்திருக்காமல் ஏன் கதவையும் இழுத்துப் பூட்டிக்கொண்டு போய்விட்டான்?— அவருடைய மூளை, ஒரு நிலையில் இல்லை. தெளிவுகாணப்போய் குழப்பக்குட்டையில் சிக்கியகதையாயிற்று. போலீசோ, வேறுயாருமோ பேசாததால், துரைசிங்கம் ஜானகியின் பங்களாவில் செத்துக்கிடப்பதுயாருக்கும் தெரியவில்லை என்றே கருதினார்! ஓரோர் சமயம், அதுவும் உண்மையா என்பதை யாரையாவது அழைத்துப்போய்ப் பார்த்து விட்டுவந்தாலென்ன, என்று நினைப்பார்.

தன்னாலேயே தன் தலைக்குக் கொள்ளி வந்தால்—தன்மீது விசாரணை வந்தால்—தன்மகளின் கதி...என்கிற குழப்பம் ஏற்பட்டு உடனே தடுக்கும். பருத்த உருவமும், கம்பீரத்தோற்றமும் கொண்ட அவருடைய கண்களில் கவலை படரலாயிற்று, பழைய அருமைநாயகம் இல்லை. மகளைப் பார்ப் பார்—அழுவார். தன்னுடையநிலையை நினைத்து நினைத்து நோவார். துப்பறியும் துரைசிங்கம் ஒருவர்தான் ஜானகியைக் காப்பாற்றித்தரக்கூடிய கண் கண்ட கடவுள்’ என்று நம்பினார்! அவர்தான் போய் விட்டாரே— அவரது கருத்துப்படி!!

அதனால் சாவின் கடைசி நிமிடத்தை வரவேற்கும் கைதி போலக் காலந்தள்ளிக்கொண்டிருந்த அவர், ஒரு நாள், மாலை உலாவப்போகும்பொழுது ஜானகியின் பங்களாப்பக்கம் பார்த்தார்! மாடியிலிருந்து இரண்டு கழுகுகள், வட்டமிட்டுக் கொண்டு பறந்தன!! ஐயோ பாவம், துரைசிங்கம் பிணம்...... கழுகுகள்... என்று எண்ணிய

# அண்ணல்

போது, அவரை அறியாமலே, அவர்கண்கள் கண்ணீர்விட்டன. நடைப் பிணமான அருமைநாயகம்! நாயகனாகவர வேண்டியவருக்கு ஏற்பட்டகதி கேட்டு கண்ணீர்க் கடலில் பாலா!!— இவ்வளவுக்கும் யார் காரணமோ. அந்த சலசலப்பு வீரனே, சங்கடப்படாமல், சிறையில்—குற்றச்சாட்டிலிருந்து மீள்முடியாத நிலையில் சிறையில் தவித்துத்துக் கொண்டிருந்த ஜானகியை ஒரு நாள் இரண்டுபேர் சந்திக்க வந்தனர். அவர்கள் வேறுயாருமல்ல! கதாசிரியர் பண்டிட்டும், வேதனை விளையாட்டிற்கு வித்திட்ட அருணாசலமும்தான். எங்களுடைய ஊரைவிட்டு அவர்களுடைய ஆட்டக்கம்பெனி போயிற்றென்றாலும், பண்டிதருடைய மனதில் ‘அகில இந்தியப் புகழ்’ காரணமாக ஜானகி கொலையும் செய்துவிட்டாளே என்று ஒரு அச்சம் ஏற்பட்டது. அதனால், தாங்கள் செய்ததெல்லாம் வேடிக்கைக்கு என்று அவனிடம் சொன்னாலல்லது தன் மனதுக்குச் சாந்தி ஏற்படாது என்று உணர்ந்தார். அதனால் வரமாட்டேன் எனப் பயந்த அருணாசலத்துக்கும் தேறுதல் சொல்லி, சிறையதிகாரிகள் சம்மதம் பெற்று அவனைச் சந்தித்தார். நாடகக் கதாசிரியர் பண்டிட் என்றதும் தன்னுடைய இதயத்திரையில் ஓவியமாக எழுந்திருக்கும் இன்பவல்லிதான் அனுப்பியிருப்பாளோ, இருக்கும் இருக்கும் என்னைப் போல் அவள் மனதும் துடிக்காதா, அவரைப் பார்த்தால் எல்லா விபரமும் தருவார், என்கிற ஆவலுடன் ஜானகியும் வந்தான்.

வந்தவனிடம் அருணாசலத்தைக் காட்டி, “இதுதாங்க அருணா! என்னமோ விளையாட்டுக்கு செய்தோம். இப்படி வினையாகிவிட்டது. இவன்மீது உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் காதலை முறிக்கவே, ‘‘அகில இந்தியப் புகழ் பெறவேண்டும்’’ என்றொரு நிபந்தனை போட்டோம். வேறொரு காரணமுமில்லை!!’’ என்று பண்டிட் பயமும் பதட்டமும் கலக்கச் சொல்லச் சொல்ல, பைத்தியக்காரனைப்போல, அருணாசலத்தையே அடிக்கடி உற்றுப் பார்த்தான் ஜானகி.

சிறையாகவும், அதிகாரிகள் இருக்கின்ற இடமாகவும் இல்லாதிருந்தால், ஜானகிக்கு வந்த ஆத்திரத்தில், அவர்கள் இரண்டு பேரையும் கடித்தேத் தின்றிருப்பான்! அடைந்த அவமானம் வேறு. எதிரே, புத்தி கூறும் நிலையிலிருக்கும் பண்டிதர் வேறு. எரிச்சல் மயமான ஜானகிக்குத்தான் இப்படி ஏமாந்தது வெளியில் தெரிந்தால் எல்லோரும் கேலி செய்வார்களே என்று அவமானமாக யிருந்தது. அதனால், தலைகுனிந்துகொண்டான்.

“தம்பீ! உங்கக் குடும்பத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கோம். நீங்க இப்படிக் கொலை செஞ்சுட்டு ஜெயில்லே மாட்டிக்கிட்டீங்கன்னதும் என் மனசு கேட்கலே ஒருவேளை, புகழ் பெறுவதற்காக இந்தப் புத்தியில்லாக் காரியத்தைச் செஞ்சிருப்பீங்களோன்னு ஒரு சந்தேகம். கொலையின் காரணமாக நிச்சயம் உங்களைக் தூக்கில்தான் போடுவாங்க! எங்க விளையாட்டு என்பது தெரியாமலே உங்களுக்கு ஒரு ‘முடிவு’ வந்துவிட்டால், அந்தக் கறை என் மனசைவிட்டு என்னைக்கும் மறையாது என்பதால்தான் அருணாசலத்தையும் அழைத்துக் கொண்டு வந்தேன். எங்களை மன்னிச்சிடுங்க தம்பீ!’’ என்று தான் செய்த குற்றங்களுக்கு “பாவ மன்னிப்பு’’ கேட்டார் பண்டிட்.

அப்போதுகூட ஜானகி தன் மீது சுமத்தப் பட்டிருக்கும் குற்றத்தைப் பெரிதாக எண்ணவில்லை. கொலை செய்திருந்தாலல்லவா பயப்பட—நாளைக்கே கமலாவக்குத் தகவல் தெரிவித்து அவளை வரச் சொல்லிவிட்டால் போகிறது—என்றே எண்ணினான். அதனாலேயே பண்டிட்டிடம், “சார்! சார்!! இதைப்பத்தித் தயவு செய்து, வெளியே யாருக் கிட்டேயும் சொல்லிடாதீங்க’’, என்று பல்லெல்லாம் தெரியக் காட்டி கெஞ்சி, சீக்கிரம் அந்த ஊரைவிட்டுப் போய்விடும்படிக் கேட்டுக்கொண்டான்.

அவர்கள் போனதும் தன்னுடைய இருப்பிடத்துக்குத் திரும்பிய கைதி ஜானகியின் மனம் எண்ணுததெல்லாம் எண்ணியது இப்படி ஏமாந்துவிட்டோமே என வருந்தினான்!! அவனிருந்த அறைக்குப் பக்கத்தில் தண்டனைப் பெற்ற ஒரு கொலையாளி இருந்தான். தன்னுடைய காதலி இன்னொருவனுக்கு மனைவியாகவே, அந்தக் கோபத்தில் குத்தி சாகடித்துவிட்டு, தூக்குத் தண்டனைப் பெற்றிருந்தான் அவன். மறுநாள் காலையில் அவனைத் தூக்கில் போடுவதாக யிருந்தார்கள். சாவென்றால் பயப்படுவோம் எல்லோரும்! எப்போது சாகப்

11-ம் பக்கம் பார்க்க

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

போதும். யூதனை எதிர்க்கும் உன்னத விளக்கை நாம் உயரத்தூக்குவோம். அந்த வெளிச்சத்தின் மூலம் அந்நிய நாடுகளுக்கும் சொல்வோம்.அதுதான் தத்தளிக்கும் ஆரிய மனித இனத்தைச் சரியான பாதையில் நடத்துவதற்குள்ள வழி’’

ஹிட்லர் அதிகாரம் பெற்றபிறகு ‘நாஜிக்கட்சி சாதித்தது என்ன? ‘எனும் தலைப்பில் டாக்டர் ரூடால்ப் பெர்க்ஸ் என்பவர் எழுதியிருப்பதாவது, ‘‘யூதர்களுடைய இனத்தை ஒழிப்பதும், அதற்கான வேலைகளைச்செய்வதுமே தேசிய உணர்ச்சியாகக் கருதப்பட்டது கவர்ச்சியுடன் ‘தேசீய சோஷியலிசம்’ என்கிற பெயர் இருந்ததே ஒழிய, ஆக்கத்துக்கான முயற்சிகளில் இல்லை. இதன் ஒரு கட்டமாக, இளம் பிள்ளைகளுக்குக் கல்வியுணர்வு போதிக்கப்படும் பொழுதே இந்த உணர்ச்சி உருவாக்கப்பட்டது. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றும் சரியானமார்க்கம் யூதர்களுக் கெதிரானத்தேசீய உணர்வை எழுப்புவது என்றேகருதப்பட்டது.’’

இப்படிப்பட்ட உணர்வு ஹிட்லர், ஈச்மென்போன்றோருக்கு எழச்செய்த ஆதிபிதா யார் தெரியுமா! அவன் ஒரு எழுத்தாளன். பத்திரிகாசிரியன். அவன் தூண்டிவிட்ட சுழல்தான், யூதர்களின் மீது வெறுப்பாக மாறியது. அவன் ஒருவனுடைய எழுத்துக்கள் மட்டும் இல்லாமலிருந்தால், ஜெர்மானியில், இப்படிப்பட்ட வெறியே உண்டாகியிருக்காது! கையிலேந்திய பேனாவை, கருத்தில் ஊறி எழுந்த கவிதை எழுத்துக்களை, வெறித்தனத்துக்காக ஓடவிட்ட அந்த வீணன் யார்?— என்பதை, அடுத்த இதழில், எழுதுகிறேன்.

(தொடரும்)

# திராவிடத் தேசியமா வளரவில்லை

# ஆந்திர-கேரள-கர்நாடகக்குரல் காணீர்!

## பூர்ஷ்வா கட்சிதான் புதுக்கட்சி!!

தி. மு. க, வின் வேகம் பேதாது லட்சியத்தை அடைவதற்காகத் தலைவர்கள் புரட்சி செய்ய மறுக்கின்ருர்கள். அவர்கள் கலைக்குமுக்கியத்துவம்கொடுக்கின்ருர்கள். கலைஞர்களைப் போற்றுகின்ருர்கள்'' என்று, தான் வெளியேறியதும், வெளியேறுதற்கான காரணங்களாகக் கூறித் திரிந்தார்—தோழர் சம்பத்.

திடீரென ஒருநாள் 'வாடைத்' தியேட்டரில் தனது புரட்சிப் புயலைக் கிளப்பினுர்— தமிழ்(த்) தேசிய(க்) கட்சி என்ற பெயரில். அதன் கொள்கைகளாக, புரட்சியே யில்லாத — புரட்சிக்கும் தனது கட்சிக்கும் தொடர்பேயில்லாத—புரட்சி என்ருல் என்ன என்றே அறியாத ஒரு அப்பாவி கூறும் விளக்கங்களுடனும் கொள்கைகளுடனும் தனது கட்சியின் திட்டங்களை வெளியிட்டார்!!

"பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய அதிக அதிகாரங்களைக் கொண்ட தமிழகத்திற்காகத் தன் கட்சி, இந்திய அரசியல் அமைப்பைத் திருத்தப் பாடுபடும். தமிழகத்தின் தொழிற்றுறையில் வடநாட்டார் எவ்வளவு பணம் போட்டாலும் பாதுகாப்புக் கொடுக்கப்படும்''

### தென்னவன்

என்று கூறிய அவர்—தமிழர்களின் உயிர்ச்சிக் காலாகிய மொழியைப் பற்றி ஏதும் கூறவில்லை. ஏனெனில் அனைத்திந்தியா பற்றி பேசத் திட்டமிட்டதால்—அவர் அன்னை மொழியாம் தமிழ் பற்றிக் கூற மறந்துவிட்டார்.

அவர் பொருளாதாரத்தைப் பற்றிக் கூறியுள்ள கருத்துக்களைப் பொருளாதாரத்தின் துவக்க நிலையைப் புரிந்தவன்கூட எள்ளி நகையாடுவான். எப்படி?

ஒரு நாடு, பொருளாதாரத் துறையில் செழித்து—முன்னேற்றம் கண்டு—வளம் பெறவேண்டுமென்ருல் சுரண்டலற்ற ஒரு பொருளாதாரக் கொள்கையைத் தனக்கென கொண்டிருக்கவேண்டும். அதாவது அந்நாட்டில் நடைபெறும் தொழிலின் செல்வ வளம்—மேலும் மேலும் அந்நாட்டின் முன்னேற்றத்திற்கும்—மக்களின் நல் வாழ்வுக்குமே பயன்படவேண்டும்--இதற்கான சோஷியலிச முறையை, "எந்த இசமும் எனக்கு வேண்டாம்'' என்பதன் மூலம் சொன்னுர் சம்பத்து!

ஆனுல் இன்று புரட்சி மனப்பான்மை கொண்ட புரட்சிப் புலி தமிழ்த் தேசியத்தார் தன் கட்சியின் பொருளாதாரத் திட்டமாக வெளியிட்டுள்ள கருத்தில் சமத்துவ இருக்கின்றதா? கொஞ்சம் கூட இல்லை. இங்குவந்து தொழில் செய்யும் வடநாட்டுப் பனியாக்களும் ஏனையோரும் தமிழகத்து மண் தரும் மூலப் பொருளைக் கொண்டும். தமிழகத்தின் மக்களின் ஆற்றலைக் கொண்டும், தங்களது பொருள் வளத்தைப் பெருக்கிக்கொண்டு இங்கேயே தங்கிவிடுவார்களா? தங்களது நாட்டிற்குச் செல்வார்களா?

ஆகவே புரட்சி புரட்சி என்று கூறி வெளியேறியவர், தனது புரட்சிக் கொள்கைகளை வெளியிட்டதும், அவற்றைக் கண்டு மிரட்சி கொண்டே—தமிழகத்து மக்கள், தமிழ்த்தேசியக் கட்சியின் கொள்கை தமிழகத்தை வடநாட்டானுக்கு, அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும், அடிமையாக்கும் கொள்கையேயாகும் என்பதைப் புரிந்துகொண்டனர். அதைப் புரிந்துகொண்ட புரட்சித் தலைவர் இப்பொழுது தமிழ் மக்களை ஏய்க்க ---தமிழ் மக்களது தேர்தல் கவனத்தை திசை மாற்றிவிட, திராவிட நாடு கிடைக்காது. திராவிட தேசியம் மக்களிடையே வளரவில்லை என்று ஒன்றுக்கும் உதவாத பிரச்னையைப் பாடத் துவங்கியுள்ளார்.

இரண்டு மூன்று ஆண்டுகட்கு முன்னரே எனக்குத் திராவிட நாட்டுக் கொள்கை பிடிக்கவில்லை என்று, மாறிய பின் கூறும் திரு சம்பத் அவர்கள்---அன்றே கட்சிலிருந்து விலகியிருந்தால் தமிழ் மக்கள் வியப்படைய மாட்டார்கள் அல்லது தேர்தல் கழிந்த பின்னர்---காங்கிரசைத் தேர்தல் காலத்தில் சந்தித்த பின்னர் கட்சியிலிருந்து விலகிவிட்டாலும் தமிழ் மக்கள் வியப்படைய மாட்டார்கள். அவர்தம் செயலை ஐயக் கண்கொண்டு பார்க்கமாட்டார்கள். தமிழகத்திற்குத் தீங்கிழைக்க வந்தவர் எனத் தூற்றவும் மாட்டார்கள்! ஆனுல்...

தமிழகத்தின் மிகப் பெரும் இடதுசாரிக் கட்சியான தி. மு. க வருகின்ற தேர்தலில் காங்கிரசை மாநில அரசில் செல்வாக்கற்றதாக்க---தனது திட்டங்கள்-தமிழகத்தின் முன்னேற்றத் திட்டங்கள்---ஒழுங்காக நிறைவேற வேண்டிய நல்ல நிலையை உருவாக்க---தமிழகத்து மக்களிடம்--வடவரின் கொடுமைகளையும்---காங்கிரசாரின் காட்டிக்கொடுக்கும் போக்கினையும் எடுத்துக் கூறிவரும் இன்று, அக்கட்சியிலிருந்து விலகினுல் பிளவு ஏற்படுத்தினுல் மக்கள் அவரை நம்புவார்களா? தமிழகத்தின்கண் பற்றுள்ள இடதுசாரிகளும்' பொருளாதாரத் துறையில் முன்னேற்றக் கருத்துக்கொண்ட இடதுசாரிகளும் இன்று சம்பத் அவர்களின் ஆகாத போக்கினைக் கண்டு வருந்தத்தான் செய்கின்றனர். ம. பொ. சி. அவர்களே தேசியத்தாரைப் பற்றி என்ன கூறுகின்ருர்---ஏன் இவர் தனிக் கட்சி அமைக்க வேண்டும் என்றுதானே கேட்கின்ருர்.

இன்று தனது தோல்வியை மறக்கவும், மறைக்கவும் இல்லாததை யெல்லாம் பேசியே மேலும் தமிழகத்திற்குப் பல தீமைகளையே தேடுகின்ருர். ஆம் ஒரு கொலை செய்தவன்—மேலும் பல கொலை செய்ய அஞ்சமாட்டானல்லவா?

திராவிடத் தேசியம் வளரவில்லை எனக்கூறுகின்ருர். அக்கூற்று அவர் நெஞ்சறிய அவரால் கூறப்படுவதன்று! அவர் இன்று சார்ந்திருக்கும் சுற்றுச் சார்பிற்கு ஏற்பக் கூறுவதாகும். எப்படி?

அவர் வீற்றிருக்கும் இந்தியப் பாராளுமன்றத்திலேயே திராவிடத்தேசியத்தின் குரல் ஒலித்திருப்பதைப் பன்முறைக் கேட்டிருக்கின்ருர். அவரும் ஒலித்திருக்கின்ருர், இதோ எடுத்துக் காட்டுக்கள்.

சென்ற 28—2—60 அன்று டெல்லி மாநிலங்கள் சபையில் ஏ. சுப்பர்ராவ் என்ற கேரளத்துப் பொதுவுடைமை உறுப்பினர் பேசும்போது,

தொழில், பொருளாதாரம் போன்ற துறைகளில் வளர்ச்சி பெருத, பின்தங்கிய மாநிலங்களின் அபிவிருத்திச் சிக்கல்களை ஆராய ஒரு வல்லுநர் குழு ஏற்படுத்த வேண்டும். "என்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து பேசும்போது.'' கேரளத்தின் பின்தங்கிய நிலையைக் கருத்திற் கொண்டால் இராண்டாம் திட்டத்தில் அம்மாநிலத்திற்கு 81 கோடி ரூபாய் ஒதுக்கியது மிகவுட் அற்பம், மூன்ருவது திட்டத்தில் 250- கோடி தரவேண்டும்''.

வட நாட்டிற்கும் தென்னுட்டிற்கும் பொருளாதார ஏற்றத்தாழ்வு இருக்கையில் ஒற்றுமை ஏற்படாது'' என்று பேசியிருக்கின்ருர்

மைசூரைச் சேர்ந்த காங்கிரசு உறுப்பினர்—கோவிந்த ரெட்டி என்பவர்—அதேநாளில்— பேசும்போது "தொழில்கள் எல்லாம் ஓரிடத்திலேயே அமைக்கப்படுவது கூடாது. "வடநாடு—தென்னுடு'' ஏற்றத்தாழ்வு அகற்றப்பட வேண்டும் என்று பேசியுள்ளார்.

அடுத்து ஆந்திரத்தைச்சார்ந்த ஒருவர். வடவரசின் கொடுமைகளை மிகவும் காரசாரமாகக் கண்டித்துப் பேசியுள்ளார். சென்ற 1-10-59-ல் சென்னையில் அவர் பேசும்போது.

"இந்தியாவிலுள்ள மற்றமாகாணங்களை ஒன்ருக இணைத்து உணவு மண்டலம் எதுவும் நிறுவப்பட வில்லை. அப்படியிருக்கத் தென்னுட்டிலுள்ள மாகாணங்களை மட்டும் ஒன்ருக இணைத்து ஏன் ஒரு தனி மண்டலத்தை வைத்துக் கொண்டிருக்க வேண்டும். இது எனக்குப் புரியவில்லை மத்தியப்பிரதேசமும் இராசஸ்தானும் மட்டும் ஏன் தனித் தனி மண்டலங்களாக இருந்து வரவேண்டும்? தென்னுட்டு மாநிலங்கள்! ஏன் தனித் தனியாக இருக்கக்கூடாது? "வட நாடு'' மாகாணங்கள் ஒரு மாதிரியாகவும்—"தென்னுட்டு'' மாகாணங்கள் ஒரு மாதிரியாகவும் ஏன் நடத்தப்படவேண்டும்? எனத்தீப்பொறி பறக்கப் பேசிய அவர்--திராவிடத்தின் தன்மதிப்பு உயர வழியும் கூறுகின்ருர்.

"தென்னுட்டின் மதிப்பு உயர வேண்டுமானுல் நான் சொல்லக் கூடிய ஒரேவழி, சென்னை—ஆந்திரம், கேரளம், மைசூர் ஆகிய நான்கு மாகாணங்களும்; ஒன்ருேடொன்று இணைந்து கைகோர்த்து வேலை செய்ய வேண்டும்'' எனவும் கூறியுள்ளார், இப்படி அருமையாகப் பேசியவர் வேறுயாருமல்ல—காங்கிரசுத் தலைவர்— திருவாளர் சஞ்சீவி ரெட்டியார் தான்.

நாம் இங்குப்பார்த்த மூன்று மேற்கோள்களிலிருந்தும் ஒரு பேருண்மையைப் புரிந்துகொள்ளலாம். நம்மைப்போலவே, வேறு

(11-ம் பக்கம் பார்க்க)

(9-ம் பக்கம் பார்க்க)

போகிறோம் என்று தெரியாத நமக்கே இப்படியென்றால், நாளைக் காலையோடு தன் வாழ்வு முடியப் போகிறது—இந்த உலகத்தை நாம் பிறகு பார்க்கமுடியாது—நாம் சாகப்போகிறோம்—என்று நினைக்கும் அந்தக் குற்றவாளியின் மனம் என்ன பாடுபடும்?

இதனாலேயே, தூக்குத் தண்டனைப் பெற்ற குற்றவாளி என்றால், சிறையில் எல்லோரும் அனுதாபத்துடன் பார்ப்பார்கள். அப்படித் தண்டனை அடைந்த கைதிகள், தண்டனை நிறைவேற்றப்படுகிற நாள் வரவர, வெறிப்பிடித்தவர்கள் போலாகி விடுவார்கள். திடீரெனப் பக்தி ரசம் வழிந்தோடும். அது முடிந்த மறுகணமே, "பாவிப்பயலே! கடவுளே! ஏண்டா என்னைப் படைத்தாய்!!" என்று கத்துவார்கள். உண்மையில் அவர்கள் படும் வேதனைக்கு நரகம் என்று இட்டுக்கட்டிக் கூறுவார்களே அந்த இடத்து வேதனைக் கடுகுக்குச் சமம்! உண்மையில் ஜானகி அவனுக்காக மனமிரங்கினான். ஐயோ பாவம் என்று பரிதாபப்பட்டான்.

தூக்குத்தண்டனையை நிறைவேற்ற மறுநாள் காலையில் அவன் இழுத்துச் செல்லப்பட்டபோது, மற்றக் கைதிகளின் அறைகளையும் குறிப்பாக ஜானகியின் அறையையும் நோக்கி, "அண்ணாச்சி! நான் போறேன்...", என்று வணங்கிவிட்டுப் போனபோது, ஜானகிக்குப் பரிதாபமாயிருந்தது. அப்படியொரு பரிதாபமான கட்டம் தனக்கும் வரலாம் என்கிற எண்ணமே ஜானகிக்கு வரவில்லை! கமலாவுக்குக் கடிதம் எழுதினால் வந்துவிட்டுப் போகிறான் என்று நினைத்தான் முதலில்—அடடே! அவனை வடநாட்டுக்கல்லவா தலைமறைவாகப் போய் இருக்கச் சொன்னோம், பத்திரிகையில் செய்தி பார்த்தால்தானே அவன் வர முடியும் என்கிற சந்தேகம் உடனே வந்தது — சரி, சரி, இன்றையதினம் யாராவது நம்மைப் பார்க்க வந்தால் அவர்கள்மூலம் இந்தியாவிலுள்ள சகல பத்திரிகைகளிலும், "கமலாவுக்கு நம் முயற்சி வீண். உடன் திரும்பி ஊர் வருக. என்னால் ஜெயிலில் இருக்க முடியவில்லை", என்று பெரிய விளம்பரம் கொடுக்கச் சொல்ல வேண்டும் என்று முடிவு செய்தான். சிறையிலிருந்த அவனை வாரத்துக்கு ஒருதடவை பாலாமணியும் அவள் தந்தை அருமைநாயகமும் வந்து பார்த்துவிட்டு போவது வழக்கம். இரண்டுபேரும் சிறையின் கதவுகள் வழியாக உள்ளே நுழையும்போது இரண்டு சோகச் சின்னங்கள் நுழைவதுபோலிருக்கும்! அதிலும், இப்போது அருமைநாயகத்தின் தோற்றத்தைக் கேட்க வேண்டுமா? துப்பறியும் துரைசிங்கத்தைப் பேய் அடிக்க, தானே காரணம் என்று எண்ணி எண்ணி, அந்த எண்ணத்திலேயேவெந்துபோய்க்கிடந்தார்! பாலாவின் நிலையோ சொல்ல வேண்டாம்—பாதிப் பைத்தியக்காரியின் நிலை!! இருவரையும் கண்ட ஜானகி, அவசர அவசரமாகச் சொன்னான், "மாமாமாமா! இன்னைக்கே நான் சொல்ற செய்தியை இந்தியா பூராவிலுமுள்ள பத்திரிகைகளில் விளம்பரப் படுத்த வேண்டும். என்ன சேதின்னு எழுதிக்குங்க......... கமலா! உடனே, ஊருக்குவா..." அவன் பேசிய அவசரத்தையும், சொன்ன தகவலையும் கேட்டபோது, மகளும் தந்தையும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். "என்னமாமா! நான் சொல்றது வேடிக்கையாயிருக்கா. உண்மை மாமா. நான் கமலாவைக் கொல்லலே. அவன் உயிரோடுதான் இருக்கான்...... நீங்க ஒரு விளம்பரம் போடுங்க! அவன் ஓடிவருவான்..." அருமைநாயகம், அவன் பேசப் பேச, மனம் பதறினார். பாலாமணியோ, மேலும் மேலும் அழலானாள். போகும்போது இருந்த சோகத்தைவிட பன்மடங்கு சோகத்தோடு தந்தையும் மகளும் சிறையை விட்டுத் திரும்பினர்! ஜானகியோ, மாமா நிச்சயம் விளம்பரம் போடுவார் — என்று உள்ளே கருதிக் கொண்டு போனான். அருமைநாயகமோ, "பாவம்! மூளைக்கோளாறாகி விட்டது போலிருக்கு......இல்லாவிட்டால் செத்தவனை விளம்பரம் போட்டுக் கூப்பிடச் சொல்வானா?", என்று மேலும் குழம்பலானார். அத்தானுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று வெளியே பாலா சொல்லவில்லையே தவிர, அந்த உத்தமியின் உள்ளமே குலுங்கியது! இடிமேல் இடிவிழுந்ததைப்போல், எண்ணியெண்ணி வடிக்கலானாள் கண்ணீர்!!

யாரிடமாவது இதைச்சொன்னால் எங்கே ஜானகியைப் பைத்தியக்கார விடுதிக்கு அனுப்பிவிடுவார்களோ. அதைவிட இதேமேல்... இப்படி, எண்ணி, வாய்மூடி மௌனியானார், அருமைநாயகம். ஜானகியோ, 'மாமா விளம்பரம் போட்டிருப்பார்' என்று நம்பிக் கொண்டிருந்தான். அவனுக்கு இவ்வளவு பெரிய அற்புதக்கற்பனைகளை அள்ளியள்ளித் தெளித்த அன்பன் கமலாவோ இதேசமயம், டிக்கட்டில்லாப் பயணம் செய்தமைக்காக, ஒரு வாரம் சிறைவாசம்பெற்று ஒரிசா சிறையில் கிடந்து தண்டனைமுடிந்ததும் எங்கேபோவது என்று திகைத்தபடி வெளியே வந்தபோதுசிறைஅதிகாரி, "சார்! இந்தாங்க..." என்று எந்தப் பணப்பை தொலைந்து போய்விட்டதாக அவன் எண்ணினானோ அந்தப் பணப்பையைக் கொடுத்தார்! "எப்படிசார் இங்கே வந்தது?" என்று ஆச்சரியத்தால், கூவினான், கமலா. அவன் வைத்திருந்த பணமெல்லாம் அப்படியே இருந்தது. எப்படிவந்தது இங்கே! இரயிலில் இது இல்லாமல்தானே நாம் அகப்பட்டுக்கொண்டோம்--என்னவிந்தை!—ஊம்... அவன் யோசித்தபோது. ஒரு கடிதத்தையும், கொடுத்தார் சிறையதிகாரி! அந்தக் கடிதத்தைக் கண்டதும், கமாவின் கண்கள் விரிந்தன, அவன் வதனத்தில் வெற்றியின் ரேகை படர்ந்தது. வானத்தை அண்ணாந்து பார்த்தான். ஒரு வார காலம் சிறைக்குள்பட்டதெல்லாம் பனிபோல் போய்விட்டது. ஆனந்தபரவசனாகி, துள்ளும் மனமும் கையில்பணப் பையுமாகச் சிறையை விட்டுக் கிளம்பினான் அந்தச்சிங்காரன்!!

(தொடரும்)

## திராவிடத் தேசியமா...

10-ம் பக்கம் தொடர்ச்சி

வேறுகட்சியைச் சார்ந்த ஏனைய மூன்று மாநிலத்தவரும் "வடநாடு தென்னாடு" என்று பேசியிருப்பது எந்தத்தேசியத்தைக் குறிக்கின்றது. திருவாளர் சம்பத் கூறுகின்றாரே திராவிடத்தேசியம் மலரவில்லை—என்று. நாம் இங்குப் பார்த்த எடுத்துக்காட்டுச்கள் திராவிடத் தேசியம் மலர வில்லை என்பதையா காட்டுகின்றது.

மற்ற மாநிலத்தவரும் "தென்னாடு வட நாடு" என்று பேசுவதற்குக் காரணம் நமது உழைப்பு என்றால் மிகையாகாதே! இக்கூற்றினை சம்பத் அவர்களாலேயே கூட மறுக்கமுடியாதே!

திராவிட விடுதலை வேண்டி நிற்கும் நம் கழகம்--தமிழகத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாகவா நிற்கிறது—சம்பத்தைப் போல்.

சென்ற இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களின்போது நெய்வேலி, குந்தா, பெரம்பூர் போன்ற ஒரு சில திட்டங்களேனும் நமக்குக் கிடைத்தது என்றால் யாருடைய உழைப்பால் கிடைத்தது? மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டத்திலும் ஒதுக்கி வைக்கப்பட்டு, நாம் செய்த கிளர்ச்சியால்—இன்று அமைச்சர்கள் காங்கிரசின் எளிய தொண்டர்கள் முதல் அவர்கட்கு வால்பிடிக்கும் ஏனையோரின் தொண்டர்கள் ஈறாக எல்லோரும் பேசும் தூத்துக்குடித் திட்டம் பெயரளவிலேனும் நிறைவேற்றப்படும் எனப்பேசப்படுவது யாரால்?

இவைகளையெல்லாம் சம்பத் அவர்கள் மறந்திருக்க மாட்டார்—என்றாலும் பேசுகின்றார் என்றால்—அரசியல் அனாதையாகிவிட்ட அவரை ஆதரிப்போருக்குப் பக்கப் பாட்டுப் பாடவேண்டுமென்பதற்காக வேறுவிதமாகப் பேசுகின்றார், தென்னகத்திற்கு மாபெரும் கேட்டினையும் தேடித் தர முனைந்துவிட்டார். ஆம் "வடக்கு வாழவில்லை—தெற்கு தேயவில்லை" என்றுநாக்கூசாது கூறுகின்றார்

எனவே மக்கள் சம்பத் அவர்களின் கொள்கையை—பேச்சை—அலசி ஆராய்வதை விட்டுவிட்டு காலத்தை வீணாக்காமல்--என்றும்போல் இனியும் காங்கிரசை எதிர்த்துப் போராடி, நம் கழகம் முன்னேறுவதற்கான வழியைத் தேடவேண்டும்.

வாழ்க திராவிடம்.

—0—

## கானாதபேட்டி...

(-8ம் பக்கத் தொடர்ச்சி)

நேரு அனுப்பி வைச்சதுதானே?" என்று கேட்டுக் கொண்டே எதிரில் போய் நின்றேன். "ஆமாம்! மாம்பழ மட்டுமா, இலங்கை இன்சூரன்ஸ் திட்ட ஆலோசனைக்கு ஒரு ஆளை அனுப்புங்கன்னேன். அவரைக்கூட அனுப்பியிருக்கார்" என்றார். "இப்படியெல்லாம் உங்களுக்குச் செய்கிறார்! எங்க தமிழர்களை விரட்டுறீங்கன்னு தெரிஞ்சும் செய்கிறார்," என்றேன். "ஆகா! பார் அவர் பெருந்தன்மையை!! தி. மு. க. கட்சிக்காரர்களாகிய நீங்களும் இருக்கீங்களே. விரோதியையும் நேசி, என்றார், மகாத்மா. அவருடைய சீடனல்லவோநேரு?" என்றார், அம்மணி.

"ஆமாம் அம்மணி! இதேபோல சீனர்களையும் பாகிஸ்தானியர்களையும் ஏன் நேசித்து நேரு அவர்களுக்கு மாம்பழம் அனுப்பவில்லை. வடக்குக்கு வம்பு செய்கிறவர்கள் என்பதால் அல்லவா?", என்றேன். அம்மணி, புன்சிரிப்போடு, என்னைப் பார்த்தார். உங்களுக்கு நாதியார்?—என்று கேட்பது போலிருந்தது, அந்தச் சிரிப்பு. "அம்மா! தின்று விட்டு கொட்டையைப் புதைத்து வையுங்கள். நாளைக்கு மரமாகி, நிறையப் பழம் கொடுக்கும். ஏனெனில், மாம்பழம், எங்கள் தமிழ் நாட்டுடையது!!" என்று சொல்லிவிட்டு, மனக்கண்ணை ஓட்டினேன். மதுரை தெரிந்தது. அடடா! மாநாட்டுக்கு எப்படியெப்படி ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று வியந்தவாறே, அலுவலகம் சேர்ந்தேன்!!

—o—

## தேவை

நல்லமுறையில் இயங்கிக் கொண்டிருக்கும் சிங்கிள் டெம்மி அல்லது டபுள் கிரவுன் அச்சு [illegible]திரம், சென்னையிலோ, வெளியூர்களிலோ விற்பனைக்கு இருந்தால் உடனே பின் கண்ட முக்வரிக்கு கடிதம் மூலம் தொடர்புகொள்ளவும்,

"அறப்போர்"
12- 3-வது குறுக்குத்தெரு,
சென்னை-24.

## கேள்வி பதில்

கே: "எனக்குப் பிடித்த தலைவர்கள் நேரு, லால்பகதூர் சாஸ்திரி, ஜகஜீவன்ராம் "முதலியோர்களும்" என்று தோழர் சம்பத் சொல்லியிருப்பதைப் பார்த்தீர்களா?

மு. இளவரசு, பெங்களூர்—1

ப: கண்டேன்! ஆச்சரியப்பட்டேன் நல்ல வேளையாக அவர்களையாவது 'தலைவர்கள்' என்று ஒப்புக் கொண்டாரேயென்பதால்!!

* * *

கே; அமெரிக்கக் "குடியரசு" தலைவர் கென்னடி தான் எழுதிய 'அரசியல் அறிஞர்கள்' என்ற நூலில், 'எந்த ஒரு அரசியல்வாதி, தன் கடந்தகால அரசியல் அடிப்படைக் கொள்கைகளை, சூழ்நிலைகளுக்காக மாற்றிக் கொள்கிறானோ அன்றே அவன் அரசியல் வாழ்வு முடிந்து விட்டது என்று எழுதியிருக்கிறாரே, அது குறித்துத் தங்கள் எண்ணம்?

கா. பெ. நாதன்
காரியமங்கலம்.

ப: நான் மறுக்கிறேன்—ஏனெனில் 'சூழ்நிலை' களுக்காக மாறியும்கூட' அரசியல்' முடியாமல் பவனிவரும் ஈரோட்டுத் தலைவரும் உண்டு இந்நாட்டில் என்பதால்!!

* * *

கே: காங்கிரசிலிருந்து விலகும் போது பெரியார் கதர் நிதியிலிருந்து 30 ஆயிரம எடுத்துச் சென்றதும் கேட்டபோது "கோர்ட்டில்" வாங்கிக் கொள்ளச் சொன்னதும் — தோழர் சம்பத், தி. மு. க.—விலிருந்து விலகியதும் "இந்தி எதிர்ப்பு மாநாட்டு நிதி"யில் சற்றேறக் குறைய அதே 30 ஆயிரம் எடுத்துச் சென்றதும். கேட்டால் கோர்ட்டில் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்லுவதும் உண்மைதானா?

மேலேயுள்ள அதே சகோதரர்.

ப: பெரியாரின் வழியை அவரது அண்ணன் பிள்ளையாரும் பின் பற்றுவது உண்மைதான்; ஆனால் தோழர் சம்பத்து வசமுள்ள நிதி 30 ஆயிரமா 27 ஆயிரமா 20 ஆயிரமா 15 ஆயிரமா என்பது அவர் கூடயிருப்பவர்கட்குக் கூடத் தெரியாது—ஏனெனில், அவர் கணக்கே சொல்லவில்லை!!

* * *

கே: வாங்கிப் பழகிய கையும் போட்டுப் பழகிய பையும் சொல்லிப் பழகிய பொய்யும் கொண்டவர் யார்?

கே. கே. எம். யூனுஸ்
வீரசோழன்

ப: சென்னையிலிருந்து ரயிலில் கோவை சென்றால் சேலத்துக்கும் கோவைக்கும் இடையில் ஒரு பெரிய சந்திப்பைக் கொண்ட ஒரு ஊர் இருக்கிறது. அங்கே போய்க் கேட்டால், சிறுபிள்ளையும், சொல்லும்!

* * *


## அறிவுகமழும்-

## அற்புதமான-தனிமலர்!

உங்கள் பாராட்டைப்பெற "அறப்போர்" வழங்கும் மலர்!!

- மாநில மாநாட்டின் ஏராளமான புகைப் படங்கள்!
- நிகழ்ச்சி -- பேச்சு-- தொகுப்புகள்!

இதுமட்டுமா?

அரங்கண்ணல் தீட்டும்
'நான் கண்ட அண்ணா'
அற்புத கட்டுரை படங்களோடு.

மற்றும்

ஆந்திராவும் நாமும்
கருநாடகமும் நாமும்

கேரளமும் நாமும்

இதுவரையில்லாததனிமுயற்சி!

திராவிட நாடா பகற்கனவு?
—அறிஞர் அண்ணா, நாவலர், கலைஞர், என். வி. என் சி. பி. சி, பேராசிரியர், மதியழகன்—கருத்தரங்கம்.

மாவட்டந்தோறும் நாம்
—மு. சண்முகம் வழங்கும் சிறந்த கட்டுரை.

இன்னும் பல, வண்ணம் நிறைய, அழகான வர்ண முகப்பு,
28-பக்கங்கள், ஜூலை 22-ந்தேதி கிடைக்கும், விலை 50 புதுக்காசு.

மிகுந்த செலவில் தயாரிக்கப் படுவதால், ஜூலை 8-க்குமுன் வேண்டிய படிவங்களுக்கு முன்பணத்துடன் எழுத வேண்டும். ஆண்டுசந்தா சேருகிறவர்களுக்கு மலர்இலவசமாக அனுப்பப்படும். அரையாண்டு சந்தா கட்டியிருப்பவர்கள் 50 புதுக்காசுகள் தனியாக அனுப்புக.—பொறுப்பாளர் "அறப்போர்" சென்னை—24.


ஆசிரியரும், வெளியிடுபவரும்: இராம. அரங்கண்ணல், 12- 3. வது குறுக்குத்தெரு சென்னை 24.
அச்சிட்டோர் எம். பி. சத்தியமூர்த்தி முல்லை அச்சகம் 3-40 மவுண்ட்ரோடு சென்னை-6